முரசொலி

வார இதழ் — மு. கருணாநிதி

முரசு 3 | 8—6—56 | வெள்ளி | ஒலி 9

அன்புள்ள
பொன்மூடி!

சென்ற மடலில் மாநாட்டின் சிறப்புகளையும் சிந்தனையைத் தூண்டிவிடும் கருத்துரை பற்றிய விபரங்களையும் விடுதலை முரசு கொட்டி விலங்கொடிக்கத் தாவும் வீரர் வரிசையின் வலிமைமிகு முழக்கம் பற்றியும் விவரித்திருந்தேன் அந்த வர்ணனை கண்ட மகிழ்ச்சியிலேயே திளைத்திருப்பாய்; உடன் பதில் எழுதிட மாட்டாய்—எழுதுவதற்குத்தான் என்ன இருக்கிறது என்று கருதியிருந்தேன்.

நீயோ—ஒரே வரியில் "மாநில மாநாட்டின் எதிரொலி எப்படியிருக்கிறது?" என்று கேட்டுவிட்டாய். உன் ஒரு வரிக் கேள்விக்குப் பதில் எழுத ஏடே இடந்தராது தோழா, இடந்தராது! அவ்வளவு எழுத வேண்டும், பதில் என்ற முறையில் உனக்கு—நான்!

மாநாடு முடிந்ததும் தோழர் தென்னரசுவினால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த கூட்டங்களில் கலந்துகொள்வதற்காக மாயவரம் கவிஞருடனும், திருச்சி முத்துவுடனும் சுற்றுப்பயணம் கிளம்பிவிட்டேன்.

இடையகோட்டை, பிரான்மலை, சிங்கம்புணரி, திருக்கோட்டியூர், சிவகங்கை ஆகிய ஊர்களில் நடைபெற்ற எழுச்சிமிக்கப் பொதுக்கூட்டங்களில் கலந்து கொண்டு திரும்பினேன்; வழக்கம் போல் திருச்சி, தஞ்சை, திருவாரூர் வழியாக!

கண்ட இடங்களில் எல்லாம் கழகக் காளையர் களிப்பு கொட்டும் முகத்தினராய் — கடமையெனும் கட்கமேந்தி — களம் புகும் கம்பீரத்தோடு காட்சி தந்தவண்ணம் உள்ளனர். விடுதலைப் போருக்கான பெரியதோர் அரணைக் கட்டி முடித்துவிட்டதாகக் கருதி இறும்பூதெய்துகின்றனர், இயக்கக் காவலர்கள்!

நாடெங்கும் நகரெங்கும் நமது மாநாட்டின் எழில் பற்றியும் ஏற்றம் பற்றியும் இலட்சியம் பற்றியும் நல்லோர் புகழ்கின்றனர். நாவலரும் நல்ல பாவலரும் நாமணக்கக் கவிதை கூறி, தேன் மணக்கும் செந்தமிழால் நம் செவிமணக்க—சிந்தை மணக்கச் செய்திடுகின்றனர். நடே புகழ்கிறது நண்பா, நாடே புகழ்கிறது!

அஞ்சுகமும் அழகு மயிலும் இருக்குமிடத்தில் நஞ்சுமிழ் நாகத்தின் புற்றும் இருந்திடலாமல்லவா? "ஆமாம் — இருந்திடலாம்; அதற்கு நாங்களே எடுத்துக்காட்டு" என சில மாற்றுக் கட்சி நண்பர்கள் மார்தட்டிக் கொண்டு வருகிறார்கள். இது தான் தோழா; இந்த மாநாட்டின் மகத்தான எதிரொலியென்கிறேன நான்!

கழகத் தோழர்கள் — நாட்டுக்குடையோர் பல்லோர்—பாராட்டுகின்றனர்! ஏழாண்டுக் குழந்தையாம் தி. மு. கழகத்தை "கண்ணே—மணியே—கனிரசமே - கலைச் செல்வா—கடமை வீரா—சண்யக் காவலா!" என்றெல்லாம் பாடல் இசைத்து உற்சாக வெள்ளத்தில் மிதக்கிறார்கள். ஆனால் "அய்யோ — இந்தக் குழந்தை நமக்கிருக்கும் செல்வாக்கை சீரழித்துவிடுமே" எனக் கலங்குகிறார்கள்; மலடியாக இருக்கும் சிற்றன்னை நிலையிலேயுள்ள மாற்றுக் கட்சித் தோழர்கள்! அந்த இழிந்த இதயத்தின் எதிரொலி நன்றாகவே கேட்கிறது நண்பா, நமது மாநாட்டுக்குப் பிறகு!

"இவர்களுக்கு மக்களிடத்திலே என்ன ஆதரவு இருக்கிறது- எங்களைப்போல உலகக் கண்ணோட்டம் பெற்றவர்களா? உழைப்பாளிகளின் ஆதரவை அடைந்தவர்களா?' என மேடைகளில் முழக்கியவர்கள் மூக்கின்மீது விரல் வைத்துக் கொண்டு மூலையில் முடங்கிக் கிடக்கின்றனர், முழு நிலவென நமது மாநில மாநாடு பொழிகின்ற ஒளியையும் ஒதுக்கிவிட்டு!

"இதுகளால் இதுவெல்லாங்கூட முடியுமா?" என அதிசயத்தால் அதிர்ச்சி கொண்டு நிற்கின்றவர், "அர்ச்சனை" ஒன்றினாலேயே தங்கள் அரசியல் பிழைப்பை நடத்திக்கொள்ள முடியுமென்று திட்டமிட்டு இப்போது தெருவிலே வித்தை காட்டும் நிலைக்கு வந்துவிட்டவர்கள்!

இவர்களையெல்லாம்விட ஒருபடி மேலே சென்று உறுமிக் கொண்டிருக்கிறார்கள் காங்கிரஸ் 'கனம்'கள்!

ஜனநாயகத்தின் அரிச்சுவடியே சரியாகத் தெரியாத இவர்கள்—கொல்லை வழியாகவும்—கோணல் வழியாகவும் — நாற்காலிகளில் இடம் பிடித்துக்கொண்ட இந்த ஜனநாயகப் போதகர்கள் — நம்மைப் பார்த்து 'ஜல்லடம்' கட்டுகிறார்கள்; இவர்களுக்கு ஜனநாயகம் தெரியுமா என்று! ஜனநாயகத்தின் ஒளி விளக்காம் அறிஞர் அண்ணா காட்டும் பாதையிலே பனெடு நாட்களாக நடைபோடும் நமக்கு இவர்களா பாடம் சொல்லித் தருவது? பாவம்; பரிதாபத்திற்குரியவர்கள்!

அவர்கள் என்ன செய்வார்கள்; மாநாட்டு விளைவு அவர்களைக் கிலி கொள்ளச் செய்திருக்கிறது — உளருகிறார்கள் — ஊளையும்.

★ தொடர்ச்சி 4-ம் பக்கம்

★ ஊழல் - ஊழல் - ஊழல் ! ★

புல்கானின் வந்தார்; புனித பாரதத்தின் புராதன இடங்களைத் தரிசித்துச் சென்றார்!

இனி ஐசன்ஹோவரும் வருவார்; அடிமைப்பட்டுக் கிடந்த நாடு எழுந்து நடமாடுகிற வித்தையைக் காணுவார்—அதாவது வடக்கேயுள்ள பல தொழிற்சாலைகள் அவருக்குக் காட்டப்படும்!

—இதைப் போலத்தான் ஒவ்வொரு முறையும்! வெளிநாட்டு அமைச்சர்களும், தூதவர்களும் வரும்போது அவர்களுக்கு ஆக்ராவின் தாஜ்மகாலும்; ராஜ கட்டத்து காந்தியார் சமாதியும் காட்டப்படுகின்றன!

ஆகாகா! இதுவன்றோ பாரதம்! இங்கன்றோ புராதன வழக்கங்கள் போற்றிப் பாதுகாக்கப்படுகின்றன !—என்று புகழ்ந்தவாறு திரும்பி விடுகின்றனர். புனுகுக்கு உள்ளேயுள்ள புண்ணிலே நெளிந்து கொண்டிருக்கும் புழுக் கூட்டத்தைப் பற்றிக் கவலைப்படாதவர்கள் அவர்கள் !

ஆண்டொன்றுக்கு சீரங்கத்திலே சொர்க்க வாசல் திறக்கப்படுமாம். வைதீகர்கள் அதைக் காண, தேவனைத்தரிசிக்க, அங்கே திரள் திரளாகச் சென்று வருகின்றனர்!

இந்திய அரசியலிலும் ஒரு சொர்க்கவாசல் இருக்கிறது. அதுவும் ஆண்டுக்கு ஒரு முறைதான் திறக்கப்படும்!

இந்தத் திறப்பு விழாவின் போதுதான் கதர்த்துணி மூடி மறைத்து வைக்கும் 'கந்தர கோளங்கள்' வெளிக்குத் தெரிய ஆரம்பிக்கின்றன !

ஆமாம், மத்திய அரசாங்கத்தின் 'ஆடிட்டிங் ரிப்போர்ட்'தான அந்த சொர்க்கவாசல் !

பொது மக்களின் வரிப்பணம் எவ்வாறு ஓட்டாஞ் சல்லிகளாக மதிக்கப்பட்டு விரயமாக்கப் படுகின்றன, என்பதை விளக்கும் கலங்கரை விளக்கம் அது !

பாரத ரத்னக்கள் எப்படி தஞ்சாவூர் உருட்டுச் சட்டி பொம்மைகளாக இருந்து கொண்டு, நிர்வாகச் சக்கரத்தை உருட்டி விளையாடுகின்றன என்பதற்கான படப்பிடிப்பு அந்த 'ஆடிட் ரிப்போர்ட்!'

ஊழலின் உறைவிடம்; பித்தலாட்டத்தின் மறைவிடம், இந்த அரசாங்கம் என்பதை வரிக்குவரி நிரூபிக்கிறது, இந்தியாவின் ஆடிட்டர் ஜெனரல் தந்திருக்கும் அந்த ஓவியம்!

விருந்துவேடிக்கைகள்; கோலாகலக் கேளிக்கைகள் - இவைகளை அனுபவிப்பதில் நமது அரசாங்கம் கிஞ்சிற்றும் பழைய ரோமாபுரி மன்னர்களுக்குக் குறைந்ததல்ல என்பதை சுட்டிக் காட்டும் அந்தக் கொடுமை நிலையைப் பாருங்கள் !

★★ 1—4—54 விருந்து 15—7—55 வரை 144 விருந்துகள் நடைபெற்றிருக்கின்றன. இவைகளில் 91 விருந்துக்கு வெளிநாட்டு மந்திரியின் இலாகா பொறுப்பேற்றுக் கொண்டிருக்கிறது, மது வகைகளைத் தவிர ஒவ்வொரு விருந்துக்கும் 65 ஆயிரம் ரூபாய்கள் வரை செலவழிந்திருக்கின்றன.

★★★ ஏறக்குறைய இருபதினாயிரம் ரூபாய்கள் வரை மது பானங்களுக்காகச் செலவழிந்திருக்கின்றன !

★★ ஒரு கூட்டுக் காரிய தரிசி சென்ற ஜூலை மாதம் வெளி நாட்டுக்கு மாற்றப்பட்ட போது ராஜிய வாதிகளுக்கு எல்லாம் மாபெரும் விருந்தொன்றை ஏற்பாடு செய்தார் அதற்கு 1625 ரூபாய்கள் செலவழிந்திருக்கின்றன.

★★★ தனிப்பட்ட உத்தியோகஸ்தர் ஒருவர் வேலை மாற்றம் காரணமாக அரசாங்கத்துச் செலவில் விருந்து நடத்திய வேடிக்கையை உலகத்திலேயே இந்தக் கேடுகெட்ட நாட்டிலே தான் கேள்விப்பட முடிகிறது !

★★ ஒரு வெளிநாட்டு அமைச்சர் ஒருவர் வந்திருந்த போது அவரைப் பின்பற்றி இந்திய அரசாங்கத்து அலுவலாளர்கள் சிலர் சிம்லாவிற்கும், கல்கத்தாவிற்கும் சென்றிருந்தார்களாம்.

★★★ அவர்களுடைய தாகசாந்திக்காக மதுபானங்களை அரசாங்கமே வழங்கி யிருந்தது! அந்த வகையில் ஏற்பட்ட செலவு மாத்திரம் ரூபாய் 9,692!

★★★ இவ்வளவு ஆயிரம் ரூபாய்களுக்கு வாங்கப் பட்ட குடி வகைகள் போதாதென்று, அந்த கோஷ்டியினர் அரசாங்கத்தின் கணக்கில் ஏராளமான ரூபாய்களுக்கு விஸ்கி, ஒயின் போன்ற போதை வகைகளை வாங்கி யிருக்கின்றனர் !

★★ ஒரு தூது கோஷ்டியின் அலுவலகத்தை அலங்கரிப்பதற்காக அரசாங்கம் சிறு தொகையொன்றை அனுமதித்திருந்தது. ஆனால் வாங்கப்பட்ட அலங்காரப் பொருள்கள் என்னென்ன தெரியுமா?

★★★ குழுத் தலைவரின் சொந்த உபயோகத்திற்கான பூட்ஸ்கள் ஊசிகள், பிரஷ்கள், விளக்கு மாறுகள், துணி, கூடைகள், மின்சார பல்புகள், சோப்புகள் —முதலியனவாம் !

வீட்டிற்குத் தேவையான சாமான்களை யெல்லாம் அரசாங்கத்துக் கணக்கில் வாங்கியிருக்கிறார், அந்தக் குழுத்தலைவர் !

★ ஒரு தலைவிக்கு பிரிவுபசார விருந்து நடத்தி வைக்க நிதி இலாக்காவிடமிருந்து அறுநூறு ரூபாய்களுக்கு அங்கீகாரம் கிடைத்திருந்தது ஆனால் செலவழிந்த தொகை எவ்வளவு தெரியுமா? இரண்டாயிரம் ரூபாய்கள்! உத்தியோக பூர்வமாக முதலில் ஒரு இடத்திலும் தனிப்பட்ட முறையில் (ஆனால் அரசாங்கத்துச் செலவில்) இன்னொரு இடத்திலும் இந்த விருந்தை நடத்தியிருக்கிறார்கள் !

★ ஹைதராபாத் மாளிகை— என்னும் அரசாங்கத்துக்குச் சொந்தமான இடத்தில்தான் அரசாங்க சம்பந்தமான விருந்துகள் நடைபெற வேண்டுமென்று முன்பே முடிவு செய்யப் பட்டிருக்கிறது.

★★★ ஆனால் இதுவரை ஒரு விருந்துகூட அந்தப் பொது இடத்தில் நடைபெற்ற தில்லையாம்.

எல்லாவற்றையும் பெருமையுடன் தங்கள் தங்கள் இல்லங்களிலேயே நடத்திக் கொண்டிருக்கிறார்கள், அந்த உத்தியோகஸ்தர்கள் !

விருந்து சாப்பிட்டவர்களுக்காக தலைக்கு 9 ரூபாயிலிருந்து, ஐம்பது ரூபாய்கள் வரை செலவழிக்கப் பட்டிருக்கிறதாம் !

—இவையாவும் உள்நாட்டு விவகாரம்; வெளி நாடுகளிலேயுள்ள நம் தூதுவர்கள் அரசாங்கத்தின் பெயரிலே செய்திருக்கும் அக்ரமத்தைக் கேளுங்கள் !

★★★ மிக மிக அவசரமாக தூதுவர் காரியாலயம் வேண்டுமென்பதை யெண்ணி ஒரு நாட்டில் ஒரு கட்டடத்தை ஆண்டொன்றுக்கு 9800 ரூபாய் வாடகை வீதம் பதினைந்து ஆண்டுகளுக்கு குத்தகை பேசினார்களாம் !

★ ஆனால் இது வரையில் அந்தக் கட்டிடத்திற்கு யாருமே குடி போகவில்லையாம் !

★ மார்ச் மாதம் 1955 வரை அதற்கான வாடகை ரூபாய் 68,133ம், ஆண்டொன்றுக்கான வட்டி ரூபாய் 9,800 வீதம் இன்னும் பத்தரை வருஷங்களுக்கு வட்டித் தொகையும் விழலுக்கிரைத்த நீராகப் பாழாகிறதாம் !

★★★ வேறொரு நாட்டில் கோர்ட்டார் பகிரங்கமாக ஏலம் போட்ட நிலத்தை ஐந்தரை லட்சம் ரூபாய்களுக்கு வாங்கியுள்ளார்கள்.

★★ இதில் என்ன வேடிக்கையென்றால் கோர்ட்டார் ஏலம் போட்ட அந்த நிலத்திற்குத் தரகு என்ற பெயரில் 1,08,850 ரூபாய்கள் தரப்பட்டிருக்கின்றன!

★★★ இதை விடப் பெரிய வேடிக்கையென்னவென்றால் இவ்வளவு தொகை கொடுத்து அந்த நிலத்தை வாங்கினபிறகு தான் தெரியவந்ததாம், அந்தக் காலி நிலம் தூதுவர் காரியாலயம் கட்டுவதற்கு லாயக்கல்ல என்கிற உண்மை !

★ வெளிநாட்டு தூதுவராலயத்தில் பணியாற்றும் வேறொரு அதிகாரி நான்கு ஆண்டுகளுக்குள் மூன்று முறை புதிது புதிதான கார்களை வாங்கினாராம் !

★★★ ஆனால் நாளது வரை அந்தக் கார்களை வாங்கியதற்கும், விற்றதற்கும் அரசாங்கத் திடம் அனுமதி பெற வில்லையாம் !

★★ முதல் தடவையாக கார் வாங்கியபோது அந்த உத்தியோகஸ்தர் இந்தியாவிலிருந்தாராம்! அவருக்குப் பதிலாக அவருடைய மனைவியாரே இந்த ஏற்பாடுகளை யெல்லாம் செய்திருக்கிறாராம்!

தவிர, இப்படிச் சட்டத்துக்கு முரண்பட்ட வகையில் வாங்கிய காரை அந்த அதிகாரி ஒரு நாள் கூட உபயோகிக்க வில்லையாம்; அதை உபயோகித்தவர்களெல்லாம் அவருடைய உறவினர்களாம் !

—இவ்வளவு அட்டூழியங்களையும் படித்தீர்கள்,

இவ்வளவும் எந்த அமைச்சருடைய இலாக்காவில் நடைபெற்றிருக்கிறது, தெரியுமா?

திகைக்காதீர்கள்; பண்டித ஜவஹர்லால் நேருவின் வெளி நாட்டு இலாக்காவில்தான் !

ஆமாம்; 'ஆடிட்டிங் ரிப்போர்ட்'டில் முழுசாக பதிமூன்று பக்கங்களை இந்த இலாக்காவின் ஊழல்கள் அடைத்துக் கொண்டிருக்கின்றன.' அதாவது, மொத்த ரிப்போர்ட்டில் மூன்றில்

★ தொடர்ச்சி 10-ம் பக்கம்

விற்பனையாகிறது!
★ மு. கருணாநிதி தீட்டிய ★
: மணிமகுடம் :
தென்னகத்து மேடைதோறும் வெற்றி முரசு கொட்டிவரும் நாடகம்!
164 பக்கங்கள்: விலை ரூபாய் 1—8—0.
அறிஞர் அண்ணா அவர்களின் மூவண்ண அழகிய படம் — கண்ணாடி போடக்கூடிய பெரிய அளவு! மூன்று அணா!
விற்பனைக் கழிவு 25 சதவீதம். தபால்செலவு தனி.
விபரங்கட்கு : முத்துவேல் பதிப்பகம், 77, மதுரை ரோடு, திருச்சி.

சென்னை 8--6--56 வெள்ளி

பம்பாய் பாடம்!

★ ○ ★

உச்சாணிக் கிளையிலே ஏறி உட்கார்ந்து கொண்டு, அதிகாரம் தன் வசம் இருக்கிறதென்ற ஒரே காரணத்தால் அடி மரத்தை வெட்டியெறியச் சொல்வதிலே விவேகமோ, விசால நோக்கமோ கிஞ்சிற்றும் இருக்க முடியாது. உலவிவர உப்பரிகை யிருக்கிற தென்றால், இடம் சத மென்று அஸ்திவாரத்தைப் பெயர்த்து விடுவதிலே பேராபத்துதானே விளைய முடியும்.

—இந்த உண்மைகளை யெல்லாம் மறந்து விட்டு, பழமை துறந்தோராய், கடந்த காலத்தைக் கனவென்றும், ருசியான கதையென்றும் நினைத்தோராய்க் திரண்டிருக்கின்றனர், பம்பாய் நகரிலே காரியக்கமிட்டியைக் கூட்டிய காங்கிரஸ் தோழர்கள்!

எண்ணங்களை ஆள்வோரிடம் தெரிவிக்க ஆர்ப்பாட்டம் செய்வது; சத்தியாக்கிரகம் புரிவது—மதயானைகளாய்த் திரியும் ஆட்சி பீடத்தை அடக்கி ஒடுக்க அகிம்சா பட்டரையிலே தயாரித்துக் கொடுத்த இந்த அரசியல் அங்குசத்தை அலட்சிய வார்த்தைகளால் களங்கப் படுத்தியிருக்கிறார் இந்த நாட்டு முதலமைச்சர்!

"பஞ்சாப் அழிந்தாலும் சரி, காங்கிரஸ் கரைந்தாலும் சரி – கவலைப்பட மாட்டேன்; குழப்பத்தைச் சகிக்க மாட்டேன்!"

—நேருவின் வாசகங்கள்தான் இவை!

ஜனநாயகக் காவலர்; இந்தியாவிலுள்ள அத்தனை கோடி மக்களுக்கும் ஒரு முகமாக ஓட்டுரிமை வாங்கித் தந்ததாகச் சொல்லிக் கொள்ளும் உத்தமர் – இட்லர் நடையிலே, இமைக்கு முன்னர் அடியற்ற மரங்கள் போல் மனிதப் பிணங்களை விழச் செய்த சர்வாதிகாரிகளின் பாணியிலே தன் ஆத்திரத்தை வெளிப்படுத்தியுள்ளார்!

அமைதி வழியில் மக்கள் கூடி நின்று கோஷங்கள் மூலம் தங்கள் உள்ளக் கிடக்கையை—உரிமைக் கோரிக்கையை தெள்ளத் தெளிய எடுத்துரைப்பதில் என்ன தவறு காண முடியும், இந்த ஆசியாவின் ஜோதி!

ஜனநாயகத்தின் தொட்டில் என்கிறார்களே அமெரிக்க நாட்டை; அங்கு கூட இந்த வழக்கம் இருந்திடக் காணுகிறோமே!

சின்னாட்களுக்கு முன்னர், நாற்பதினாயிரம் ஆலைத் தொழிலாளிகள் ஒன்று திரண்டு 'டல்லசை நாங்கள் விரும்பவில்லை!' – 'டல்லசே வெளியேறுக!' என்று கோஷ மெழுப்பினார்கள். உடன் அங்கே ஐசன்ஹோவர் 'ரிபப்ளிகன்' கட்சியின் கமிட்டியைக் கூட்டி, ஆர்ப்பாட்டக்காரர்கள் மீது போர்ப்பாட்டு பாடியதாக செய்திகள் ஏதும் வெளியாகவில்லை!

இங்குதான்-அமெரிக்காவைவிட அதிகமான அளவிலே ஜனநாயகத்தை விற்பனை செய்து வருகிறோம் என்று செவியினிக்கப் பேசுகிற பாரதத்திலேதான், பண்டித சிரோண்மணிகள் புகை கக்கும் எரிமலைகளாக மாறி கொதிப்பான வார்த்தைகளை அள்ளிக் கொட்டுகிறார்கள்!

ஆனால் பம்பாய்க் கிளர்ச்சிகளும், ஆர்ப்பாட்டங்களும் சிறிது வரம்பை மீறியதாகவே இருக்கலாம். காரணம் மராட்டியர்களுக்கு செய்யப்பட்ட துரோகம் அவ்வளவு பயங்கரமானது! வேறொரு மாநிலமாயிருந்தால்—இன்னும் கூற வேண்டுமானால், துரோகத்தைத் தாங்க வேண்டிய பூமி வேறொரு நாடாக இருந்தால்; இந்நேரம் என்னென்னமோ நடந்திருக்கும்; உள் நாட்டு யுத்தத்திற்கே பஞ்சசீலப் பண்டிதர் தயாராகவேண்டிய சூழ் நிலை உருவாகி யிருக்கும்!

கற்கள் வீசப்பட்டதாம்; காமராசர் மீதே கற்கள் விழுந்தனவாம்; 'விடுதலை' கூட 'பார்டர்' கட்டி அலங்காரமாக தீட்டியிருக்கிறது, "அஞ்சா நெஞ்சன் காமராசர்" என்று! கல்லடிக்கும், சொல்லடிக்கும் சளைக்காமல் சுயமரியாதைக் கருத்துக்களை இந்த நாட்டின் சந்து, பொந்துகளிலெல்லாம் வாரியிறைத்தானே அழகிரிசாமி; அவனுக்குத் தந்த அடைமொழியைக் காமராசருக்குத் தந்து களிப்படைகிறது, 'விடுதலை!'

சூழ்ந்து விழும் கற்களுக்கு அஞ்சாது காமராசர் திறந்த காரில் சென்றாராம். பீர்மேடு, தேவிகுளம் பறிபோனபோது தமிழ்நாட்டில் நடந்திருக்க வேண்டிய நிகழ்ச்சி பம்பாயிலே நடந்திருக்கிறதே; அந்த அளவுக்கு நல்லதுதான், என்று காமராசரே தன் மனசாட்சியோடு பேசிக் கொண்டிருக்கும் சூழ் நிலையில் அவருக்காக வக்காலத்து வாங்கியிருக்கிறார், 'விடுதலையார்!'

ஆனால் கல் வீசினார்கள் என்பதற்காக அதை விடக் கொடுமையான சொல் வீசுவதிலே பெருமை இருக்க முடியாதே! கல் உடலைத்தான் காயப்படுத்தும்; சொல் உள்ளத்தையும் காயப்படுத்தும் தன்மை கொண்டதாயிற்றே!

—தடித்த நாவையும், திறந்த துப்பாக்கி குழலையும் துணையெனக் கொண்டிருக்கும் பண்டிதர் இதை உணர மாட்டாதவராய், வழக்கம் போலவே பம்பாயிலும் நடந்து கொண்டிருக்கிறார்!

தோளுக்குத் தோள்; வாளுக்கு வாள் என்று பாமர மக்களிடம் 'சவால்' விடும் தோரணையிலேயே பிரதமர் பீடத்தில் அமருபவர் ஆர்ப்பரித்திருக்கிறார், வீரமென்ற நினைப்பில்! புறங்காட்டா பெரு நோக்கு தம்மிடம் உண்டு என்ற எண்ணத்தில்!

"எனது சொந்த நாட்டில் கலவரங்களும் ரகளையும் நடக்கும் போது வெளிநாடுகளுக்கு நான் எந்த முகத்தை வைத்துக் கொண்டு போவேன்? அவர்களுக்கு எந்தச் செய்தியைக் கொண்டு செல்வேன்?"

—ஆத்திரம் சிறிது அடங்கப்பெற்ற ஒரு சில மணிகளில் இந்த வார்த்தைகள் தப்பித் தவறி வந்திருக்கின்றன.

—இந்த நிலைக்கு யார் காரணம்?

அமைதி போதிப்பவர் நாட்டிலே அலங்கோலம்!

சண்டைக்காரர்களை சமாதானம் செய்து வைப்பவர் வீடே இரண்டாகப் பிரியும் நிலை!

பஞ்சசீலப் போதகரின் மக்கள், கிளர்ச்சிகளைத் தஞ்சமடைய வேண்டிய கோலம்!

—சித்தார்த்த நகரிலே கூடியிருந்தோரை இந்தச் சிந்தனைகளெல்லாம் சுற்றிக் கொண்டன!

இவைகளுக்கெல்லாம் காரணம் தேடுவதற்காகக் காங்கிரசார் அதிகம் அலைய வேண்டியதில்லை. அவர்கள் கமிட்டி கூட்டிய நகருக்குப் பெயர் வைத்திருக்கிறார்களே, அந்தச் சித்தார்த்தன் கூறிய அறிவுரைகளை நினைவு கூர்ந்தாலே போதும்!

ஆசைதான் இந்த உலகத்துத் துயர்களுக் கெல்லாம் காரணம்-சித்தார்த்தனின் போதனை இது!

ஆமாம்; பதவியின் மீதுள்ள ஆசை; பந்துக்களுக்கு உத்தியோகம் வாங்கித் தருவதிலேயுள்ள ஆசை; 'பர்மிட்' வாங்கிக் கொடுப்பதிலேயுள்ள ஆசை; பாமரர்களை உயிரற்ற ஜடப்பொருள்களாக மதித்து சுட்டுக் கொல்வதிலேயுள்ள மிருக ஆசை, பொதுமக்களின் குரலைக் காதில் போட்டுக் கொள்ளாமல் தறுக்கித் திரிவதிலேயுள்ள பேராசை—இந்த ஆசைகள்தான், நேரு கூறியது போல காங்கிரசை 'பெரு வியாதிக்காரன்' நிலைக்கு கொண்டு வந்திருக்கின்றன.

வாலிப வயதிலேயே ஏற்பட்ட இந்த விபரீத ஆசைகள்தான்—இப்போது காங்கிரசை அழுகிய உருவமாக ஆக்கி விட்டன!

வியாதியஸ்தன் உயிர் வாழ வேண்டுமானால்—உயிர் போன பின்பும் பெயர் நிலைக்க வேண்டுமானால் இந்த அற்ப ஆசைகளை ஒழிக்க வேண்டும்; இல்லையேல் ஆயுள் ஒழிந்துவிடும், புகழ் "பூஜ்ய"மாகி விடும் என்பதையாவது நினைவில் நிறுத்த வேண்டும்!

—'சித்தார்த்த நகரிலே' கூடிக் கலைந்தவர்கள் சிந்தித்துப் பார்க்க நாம் இதைத்தான் கூற வேண்டியவர்களாகிறோம்!

★ நீட்டோலை ★

[தொடர்ச்சி]

கிறோம் என்கிற ஒரே ஒரு கௌரவப் பதக்கத்தோடு உலவுகிறவர்கள்!

"நாடகம் ஆடிகள் நாடாளுவதா?" எனக் கேட்கிறார் ஒரு அமைச்சர்! தோழனே! இங்கே, "ஒரு அமைச்சர்" என்பதை சற்று அழுத்தந்திருத்தமாகவே குறிப்பிடவிரும்புகிறேன். அமைச்சர் பதவி எவ்வளவு பொறுப்பான பதவி! அதிலே அமர்ந்திருப்பவர் எந்த இயக்கத்தவராயினும் எத்துணை அடக்கத்திற்கு உரியவராக இருக்க வேண்டும்! நாகாக்கும் பண்பை எந்த அளவுக்குப் பெற்றிருக்க வேண்டும்! நாடு காப்பவராயிற்றே! அவர் கேட்கிறார் நம்மைப் பார்த்து நாடகமாடிகள் நாடாளுவதா என்று! வெறும் காமராசர் கேட்கலாம் — மந்திரி காமராசர் கேட்கலாமா இப்படி? மாநாட்டு எதிரொலிக்குப் பலியாகிவிட்டார் பாவம் — என்கிறார்கள் அவரை உணர்ந்தவர்கள்!

நாடகம் ஆடுபவர்கள் என்ன - மனிதர்கள் இல்லையா? அவர்கள் இந்த மண்ணுக்கு உரியவர்கள் அல்லவா? அவர்களும் வரி செலுத்துகிறவர்கள்தானே-என்று நாம் கேட்கவில்லை; நாடு கேட்கிறது—இனியும் கேட்கப் போகிறது! காமராசரின் இந்தப் பேச்சைப் படித்ததும் எனக்கு சிரிப்புத்தான் வந்தது! அந்தோ, பரிதாபம்—அவர் அவரது 'புனிதஸ்தல'மான டில்லியின் சங்கதியே தெரியாமல் இருக்கிறாரேயென்று எனக்கு நானே சிரித்துக் கொண்டேன். நாடகமாடுகிறவர் நாடாளுவதா—என்று கேட்கிற காமராசர் யார் தெரியுமா? டில்லி லோக் சபாவிலே பிருத்விராஜ் என்ற பிரசித்திபெற்ற நடிகர் ஒருவரை நியமன உறுப்பினராக ஆக்கியிருக்கும் காங்கிரஸ் அரசாங்கத்தின் தென்னாட்டுத் தூண்களிலே ஒருவர் என்று கூறப்படுகிறவர்! அவர் சொல்லுகிறார் இவ்வளவு அபத்தமான வாசகத்தை! இவரது குருநாதர் சத்யமூர்த்தி ஒரு சிறந்த நாடக நடிகர் என்பதை மறந்தார் — மந்திரி நிலையை நினைத்தாரில்லை — நம்மைக் கண்டார்-உடனே பாய்ந்துவிட்டார்! கலையுலகில் நமக்கிருக்கும் தனித்த செல்வாக்கைக் கண்டு காய்பவர்கள் காங்கிரசில் அதிகம் — அவர்களிலே ஒருவர் காமராசர்!

நமக்கு அருகாமையிலும் அந்த அசூயை அதிகமாகவே உண்டு! திராவிடர் கழகத்தாரைத்தான் குறிப்பிடுகிறேன் — கலையுலகில் புகழ் பெற்றவர்கள் அரசியல் உலகில் புகுந்துகொண்டு கைதட்டலைப் பெறுகிறார்கள் என்று பலகாலமாகவே பொருமைப் பெருமூச்சு விட்டுக்கொண்டிருப்பவர்களல்லவா; அவர்கள்! கைதட்டல்—வரவேற்பு - இவையெல்லாம் கலையுலகு தந்த பரிசல்ல; கஷ்ட நஷ்டங்களை ஏற்று, கயவர்களின் எதிர்ப்புகளை சமாளித்து, கண்ணிலே புனலேந்தி, தென்னகத்து அரசியலிலே தக்கதோர் இடத்தைப் பெற்றிருக்கும் நமக்கு நாடு தந்திடும் பரிசு அது! இதை நல்லவர் உணர்வர் — நன்றி கொன்றவர்கள் - நன்றி மனப்பான்மையினர் உணரார்!

நமது அரசியல் சமுதாயப் போராட்டத்திற்குக் கலையை ஒரு கருவியாகக் கொள்கிறோமே தவிர பிழைப்பாகக் கருதி, கொள்கை பிறழ்ந்து, கலைக்குக் கொடி பிடித்து அதிலிருந்து மீள "காக்காய்" பிடித்து அலைபவர்களல்ல நாம்!

நாட்டை மதிப்பவர்கள் நாம்! நாட்டுக்குத் தேவையான அரசியல் தத்துவத்தை வழுவற உணர்ந்தவர்கள் நாமனைவருமே! நாடாளத் தெரியாதவர்களுமல்ல; தகுதியற்றவர்களுமல்ல! இதைக் காமராசர் அறிந்திருப்பாரோ இல்லையோ, அவருக்கு மன எரிச்சலை ஆற்றிக்கொள்ள — உள்ள அரிப்பை அடக்கிக்கொள்ள — ஒரு சந்தர்ப்பம் கிடைத்தது; ஊழல் மலிந்த உரையை நிகழ்த்திவிட்டார்.

ஊமையாக இருந்தாரே, அவரா இப்படியெல்லாம் ஊர் வம்புக்குப் புறப்பட்டுவிட்டார் என்று அடுத்த கடிதத்தில் கேட்டுவிடாதே— என் செய்வது; "தி. மு. கழகம், பொதுத் தேர்தலில் நிற்பது" என்கிற முடிவைத் தவிர வேறு எந்த முடிவைச் செய்தாலும் அவர் ஆத்திரப் பட்டிருக்க மாட்டார். தேர்தல் பிரச்சினைதான் அவரை இப்படியெல்லாம் தெருமுனைப் பேச்சாளியாக்கியிருக்கிறது! இல்லாவிட்டால், "உளருவாயரைவிட ஊமை வாயர் எவ்வளவோ உத்தமம்!" என்ற பழமொழியைக் கூறிக்கொண்டு திருப்தி சிறிது பெற்றிருக்கலாம்.

ஓராண்டு காலமிருக்கிறது தேர்தல்—ஏறத்தாழ! இப்போதே காமராசர் வோட்டு வேட்டைக்குக் கிளம்பிவிட்டார்— வேட்டைக்குத் தேவையான பொய்ப் புரவி-பணப் படை—பயமுறுத்தும் நாய்க் கூட்டம்—கயமைக் கணைகள்—அத்தனையும் தயார்! தயார்! காமராசர்—வேட்டைக்கு பராக்! பராக்!! என்று அறிவிக்கப்பட்டுவிட்டது— அதன் ஆரம்ப விழாதான திருச்சி பொதுக்கூட்டத்திலே அதி விமரிசையாக நடத்தப்பட்டிருக்கிறது; அமைச்சர் பெருந்தகையால்!

சீட்டாடுகிறவர்கள் — செருப்பு போட்டுக்கொண்டு கோயிலுக்குள் நுழைந்தவர்கள்; ஆகையால் இந்த நாத்திகருக்கு வோட்டுப் போடாதீர்! இப்படிப் பேசுகிறார் காமராசர்! மாநாட்டுப் பந்தலில் யாரோ சிலர்—ஒழிந்த வேளையில் எப்போதோ சீட்டாடினார்களாம்; அவர்களை உடனே கண்டித்து ஆட்டத்தையும் நிறுத்தியிருக்கிறார்கள் தொண்டர்கள்! ஒருவேளை அந்த ஆட்டக்காரர்கள் அந்தப் பாசறையிலிருந்து அனுப்பப்பட்டவர்களாகவும் இருக்கலாம் — இதை ஒரு அமைச்சர், பொதுக்கூட்டத்திலே வெளியிட்டு எள்ளி நகையாடுகிறாராம்- கிண்டி குதிரைப் பந்தயத்திலே ஓடும் உயர்ந்த குதிரைகளுக்குச் சொந்தமானவரான ராமநாதபுரம் ராஜாவைத் தன் மந்திரி சபையிலே வைத்திருப்பவர்தான் நம்மைப் பார்த்து சூதாடிகள் என்கிறார்.

நீகூட சந்தேகப்படலாம்; யாராவது செருப்பணிந்து கோயிலுக்குப் போயிருப்பார்களோ என்று! இல்லை பொன்முடி இல்லை! இது தான் கைதேர்ந்த தேர்தல் பிரச்சாரம்! எந்தக் கோயிலில்—எப்போது—எவர்—அப்படி நுழைந்தனர் செருப்போடு என்று விளக்கம் கேட்டு—கேள்வி வேல்களைச் சொருகுவர் பொதுமக்கள் என்பதை ஏனோ மறந்துவிட்டார்; பொறுப்பை மறந்ததுபோல!

நாத்திகர் என்று பிரச்சாரம் செய்வதாலேயே நம்மைத் தேர்தலில் தீர்த்துக்கட்டி விடலாம் என்று நம்புகிறார்கள் காங்கிரஸ் தலைவர்கள்!

அவர்கள் அறியவேண்டியது ஒன்றிருக்கிறது; நண்பனே! நாம் ஒன்றே குலம் ஒருவனே தேவன் என்ற கொள்கையை மக்கள் மன்றத்தில் வைப்பவர்கள்!

"பிள்ளையாரை உடைக்கவும் மாட்டோம் — அவருக்குத் தேங்காய் உடைக்கவும் மாட்டோம்" என்ற வாசகம் வேடிக்கையாகத் தோன்றலாம். ஆனால் சமுதாய சீர்திருத்தம் எவ்வளவு பண்போடு நடைபெற வேண்டுமென்ற அண்ணாவின் அழகுதமிழும் கருத்தாகும் அது!

இவ்விதக் கருத்துக் கொண்ட நம்மை காமராசர் 'பயங்கரமானவர்கள்" என்று மக்களிடம் பிரச்சாரம் செய்கிறார். ஆனால் மக்கள் அவரைத் திருப்பிக் கேட்பார்கள்—

"மதியூக மந்திரியாரே! தி. மு. கழகம் நாஸ்திகக் கழகம் என்கிறீரே; அப்படியானால் பிள்ளையாரை உடைத்து, கிருஷ்ணனையும் உடைக்கத் துடித்துக்கொண்டிருக்கும் பெரியார் ராமசாமியின் ஆதரவை நீர் பெறுவது எதற்கு? அவர் மட்டும் ஆஸ்திகராக மாறிவிட்டாரா உமது அகராதிப்படி?" என்று!

இதுபோன்ற எழுச்சிமிக்க கேள்விகளை சமாளிக்கும் ஆற்றல் பெற்றாக வேண்டும் காமராசர்! அதிகாரமும் ஆணவமும் பெற்றிருந்தால் மட்டும் போதாது!— இவைகளோடு ஆற்றலும் சேர்ந்து பெற்றிருந்த ஆச்சாரியாரே வீழ்ந்துவிட்டார்; ஆற்றல்- அக்கிரமத் திட்டங்களுக்கு அகழாக அமைக்கப்பட்ட காரணத்தால்! இவர் போக்கும் அப்படித்தான் போகிறது — பார்ப்போம் எங்கேபோய் நிற்கிறார் என்று!

மாநில மாநாட்டின் எதிரொலி காமராசரை ஆத்திர சிகரத்திலே ஏற்றி அவசர வார்த்தைகளை கொட்டச் செய்திருக்கிறது—இதிலிருந்து நமது மாநாடு கண்டு நாடாளுங் கட்சி நடுங்கிவிட்டது என்பது புலனாகிறது!

அந்த நடுக்கம்—நமது தோழர்களுக்கு மாநாடு கண்டு ஏற்பட்டதே பூரிப்பு—அதைவிட அதிகமாக என் மனதைக் கவருகிறது!

நடுக்கத்தில் வெளிக்கிளம்பும் வார்த்தைகள் அனைத்தும் நம்மை வளர்ப்பனவே ஒழிய—அழிப்பனவாக அமையும் சக்தி கொண்டவை அல்ல! அதனால்தான் எதிரியின் மாளிகையிலேயிருந்து கிளம்பும் நமது மாநாட்டு எதிரொலியை—வெற்றி ஒலி எனக் கூறிட விரும்புகிறேன்.

இங்ஙனம்,
உன் அன்புத் தோழன்.

இப்போது விற்பனையாகின்றன !

"திராவிட நாடு" துணையாசிரியர்

இராம. அரங்கண்ணல்

தீட்டிய அற்புத நூல்கள்!

வெண்ணிலா

★ வைதீகக் கொடுமைகளை கற்பனை வளத்தோடு தீந்தமிழில் விளக்கிடும் அரிய நவினம் !

விலை ரூ. 1-8-0

புழுதிமேடு

பார்ப்பனீயம் விளைவித்த விபரீதங்களை சரிதச் சம்பவங்களோடு பிணைத்துக் காட்டும் கண்ணாடி !

விலை ரூ. 1-4-0.

தனிப்புத்தகம் வேண்டுவோர் புத்தக விலையை அனுப்பவும்.
விற்பனைக் கழிவு 25 சதவீதம்

விபரங்களுக்கு :
அன்புப் பதிப்பகம், பொறையார், (தஞ்சை மாவட்டம்)

மரணவாசல்

— ஏ. கே. வில்வம் —

'மன்னனும் மன்னன்; மனித உணர்ச்சிகளை சாகடித்துக் கொண்ட மரக் கட்டைக்கு மணி மகுடம் சூட்டி விட்டார்கள்! இந்த மண்ணிலே மாருத களங்கத்தைத் தேடிக் கொண்டார்கள்! மன்னனுக்கு இருக்க வேண்டிய விவேகம் தான் பிறவியிலேயே இல்லாமல் போய்விட்டது. மனிதனுக்கு இருக்க வேண்டிய வீரம் கூடவா வற்றிப் போய் விட வேண்டும் சீ! புலி நிற்க வேண்டிய இடத்திலே பூனை, அதுவும் கிழமாகி விட்ட பூனை; நல்ல நாடடி இந்த நாடு!'

'ஏன் இந்த ஆத்திரம், என்ன தேவி நடந்து விட்டது இப்போது?'

'ஆத்திரமா—அனலோடை யாகி விட்டதடி என் நெஞ்சம்! என் இன்பத்தைப் பறிக்க—என் சுகத்தைச் சூறையாட, என் இதய நிலவைக் குழி தோண்டிப் புதைத்து விட திட்டம் போட்டு விட்டான் தீயவன்!'

'தீயவனு? இந்நாட்டின் திருவாளன்; ஏன் உம்மைத் திருமணம் செய்து கொண்ட மணவாளனம்மா அவர்! ஆவேச வார்த்தைகளை அள்ளிக் கொட்டும் போது—சற்று நிதானம் வேண்டும், கண்ணின் கருமணி போல் உம்மைக் காத்து வரும் மன்னரை இப்படி ஏசுவது; நியாயமல்ல ராணி!'

'என்னடி மகா நியாயம் கண்டு விட்டாய், நெஞ்சிலே இரக்க மில்லாத அந்தப் பாவியை வேறெப்படி அர்ச்சிக்க வேண்டுமென்கிருய்?'

'சந்தர்ப்பத்தை சாதகமாக்கிக் கொள்ளும் பாவிகள் யாரோ, தேவி யாரின் மனதிலே சந்தேகப் புயலைக் கிளப்பி விட்டிருக்கிருர்கள். ஏனம்மா அதுதானே உண்மை?'

செவிலியா — போய் விடு இங்கிருந்து; என் ஆத்திரத்தைக் கிளப்பாதே பொங்கும் நெருப்புக் கடலாகி விட்டது என் நெஞ்சம்; இனியும் என்னிடம் இருந்து பொறுமையை எதிர்பார்த்தால்—நீ நிச்சயம் ஏமாந்து போவாய். தயவு செய்து இங்கிருந்து போய் விடு!'

'போகிறேனம்மா, பொச்சரிப்புக்காரர்கள் மூட்டி யிருக்கும் தீ புகைய ஆரம்பித்திருக்கிறது, நீங்கள் என்ன செய்வீர்கள்; கையிலே இருப்பது கொள்ளிக்கட்டை என்று தெரியாமல் தலையை சொறிந்து கொள்ளப் போகிறீர்கள்! நான் வருகிறேன் தேவி!'

எகிப்து நாட்டு அந்தப்புரத்திலே ஒருநாள் அரசி ஜினேவியாவிற்கும்; சேடி செவிலியாவிற்கும் இதுபோல உறையாடல் நடந்தது! அரசியின் ஆத்திரம் ஆவேசமாகக்கூடாது என்ற காரணத்தால், ராணியின் உயிருக்கு உயிரான தோழி செவிலியா, கண்களிலே அரும்பிநின்ற நீர்த்துளிகளை விரல்களால் வழித்து விட்டபடியே அந்தப்புரத்திலிருந்து வெளியேறினுள்!

ஜெனேவியாவின் நெஞ்சத்திலே குமுறிக் கொண்டிருந்த வேதனை, கண்ணீராகப் பெருக்கெடுத்தது.

✱

மறுநாள் காலை! தலை நகரமே தவிடுபொடியாகி விடுமோ என் றெண்ணும்படி—பகை நாட்டு மன்னனின் யானைப் படைகளும், குதிரைப் படைகளும் வெள்ளம்போல் திரண்டு வந்தன. வீரர்களெல்லாம் இரும்புக் கவசம் பூண்டு, 'உயிருக்கு உயிர்' என்று துந்துபி முழக்கியபடி பயங்கரமாக வாட்களை உயர்த்திப் பிடித்தபடி எக்காளம் போட்டு வந்தனர். 'தடதட'வெனத் தட்டப்பட்ட முரசத்தின் ஒலி கேட்டபோது, கூண்டிற் கிளிபோல் அந்தப்புரத்திலே தவித்துக் கொண்டிருந்த ஜினேவியாவின் ஆசைக் கனவின் நெடுஞ்சுவர்களெல்லாம் சடசட வென்று சரிந்து விழுந்தன!

பூக்காட்டில் தோளொடு தோளிணைத்து, தன்னோடு உலவவேண்டிய சமருக்கஞ்சா அவ்வீரன், சாக்காட்டில் சாய்ந்துபோவானே — அன்றி மன்னனுலேயே சாகடிக்கப் படுவானே—சதிகாரர்கள் விரித்திருக்கும் வலையிலே சிக்கி சிரம் இழந்து நிற்பானே — என்றெல்லாம் எண்ணினுள்; எரிதணல்மீது நிற்பவள் போல துடித்தாள்; வருவோர் போவோரையெல்லாம் கேட்டாள்— வெற்றி எப்படைக்கு? வீரன் என்ன ஆனுன்? அவள் நெஞ்சம் அலைமோதிற்று! ஆசை மாளிகையில் அழகொழுக வைத்து பூஜிக்கும் அந்த ஆணழகன் — தன் பார்வையிலேயிருந்து மறைக்கப்பட்டு விடுவானே; அன்றி மன்னன் வேண்டுமென்றே 'கூலி'களை ஏவி கொன்று போடச் செய்திருப்பானே — என நினைத்தாள். தூங்காத இமையோடு, துடிக்கின்ற இதழோடு மஞ்சத்திலே புரண்டு கொண்டிருந்தாள் ஜினேவியா. களத்திலே காதலன்— அதை நினைக்கும்போது, இவள் நெஞ்சமே ஒரு போர்க்களமாகிவிட்டது. இப்படி வேதனைத் தீயில் கருகிக்கொண்டிருந்த அவளுக்கு, தோழி தந்த செய்தி தேன் பாய்ச்சியது போல இருந்தது!

'வெற்றியம்மா, வீரனுக்கு வெற்றி! உம் நெஞ்சைக் கவர்ந்து விட்ட அந்த சுந்தர ரூபனுக்கு வெற்றி' என்று தோழி கூறியபோது; தோகை மயிலாள் களிப்பின் பெருக்கால் துள்ளி எழுந்தாள். கண்ணுடிக்கு முன்னுல் நின்று தன்னை அழகு படுத்திக் கொண்டாள், பாங்கி, பட்டும் பரிமளமும் கொண்டுவா! பழத் தொட்டியை நிரப்பு, பாங்கான உணவு தயாராகட்டும், பன்றி வேண்டாம், இளம் கன்றுக் குட்டியின் இறைச்சியைப் பக்குவப்படுத்தி வை; திராட்சை ரசம் தேவையான அளவுக்கு இருக்கட்டும்; போ உள்ளே; எல்லாவற்றிற்கும் ஏற்பாடு செய்! தீரனுக்கு; வெற்றி சுமந்து வரும் வீரனுக்கு விலை உயர்ந்த பரிசளிக்கப் போகிறேன்—

'அப்படி என்ன அரசியாரே! அவ்வளவு விலையுயர்ந்த பரிசு?'

'மயானத்திலே இறைந்து கிடக்கும் எலும்புத் துண்டு என்று என்னை நினைத்துக் கொண்டாயா? இந்த எகிப்து நாட்டில் என்னைவிட அப்படி என்ன உயர்ந்த பொருளடி உன் கண்களில் பட்டு விட்டது?'

'ஓகோ, விஷயம் இப்பொழுது தானே புரிகிறது!'

'அப்படி என்ருல் சொல்லடி சீக்கிரம்'

'அந்த வீரனுக்கு...இந்த வேல் விழி...!'

'குறும்புக்காரியடி நீ! ஏதேது, 'வீனஸ் விளையாட்டிலே' நீ பெரிய கைகாரியாக இருப்பாயோ?'

'இல்லை தேவி, அந்த விஷயத்திலே நான் அரும்புதான்; அனுபவத்திலும் குழந்தைதான்'—இப்படி ரசமான உரையாடல் நடந்து கொண்டிருந்தபோது, பாரோ வருகின்ற காலடி ஓசை கேட்கவே இருவரும் திரும்பிப் பார்த்தனர். அதற்குள் அரண்மனைப் பணிப் பெண்கள், 'மன்னர் அந்தப்புரத்திற்கு வருகிருர் தேவி!' என்று சொல்லி விட்டுச் சென்றனர். அதுவரை அரசியோடு குலவிக் கொண்டிருந்த இரண்டாவது தோழி கிளிபோலவும் வெளியேறினுள்.

★

அந்தப்புரத்திற்கு வந்த மன்னன் அரிஸ்டாடசை அன்புமொழி பேசி அழகு முகம் மலர வரவேற்ருள். வண்ண மலர் தூவப்பட்டிருந்த மஞ்சத்தில் அமர்ந்தபடியே 'ஜினேவி இன்று நம் சேனைகள் மகத்தான வெற்றி பெற்று எகிப்திற்கு கீர்த்தி தேடி தந்து விட்டன...' தொடர்ந்து ஏதோ சொல்ல தொடங்கினுன். அதற்குள் குறுக்கிட்ட ஜினேவியா. 'ஆட்கள் மூலம் அறிந்தேன்' அணை உடைத்துப் பெருகிற்று ஆனந்த வெள்ளம்! வீரரல்லவா நீங்கள்? தோல்வியோடா என்னை வந்து சந்திப்பீர்கள்; தங்களைப் போன்ற வீரரை கணவராகப் பெற்ற நான் பாக்கியசாலிதானே!' குறும்புச் சிரிப்போடு ராணி இதை சொன்னபோது. ஏனே மன்னனின் முகத்தில் 'சாவுக்களை' நிழலாடிற்று! தன் திறமையின்மையைத்தான் இப்படி 'வஞ்சப் புகழ்ச்சி' போல குத்திக் காட்டுகிருளோ என்ற சந்தேகம் அவனுக்கு! என்ன செய்வான் பாவம்; உள்ளத்தில் கபடமற்ற மன்னன், ஜினேவியாவின் உள்ளமும் 'வெள்ளை'தான் என்று எப்படி முடிவு கட்டலாம்?

'இல்லை தேவி! வெற்றிக்கு நான் மட்டும் காரணமல்ல; நம்...நம் தளபதி சபாஸ்டின்...உனக்குத்தான் தெரியுமே அந்த துடிப்புமிக்க இளைஞனின் வீரத்தைப்பற்றி...! அந்த வீரனின் வாள் தேடித்தந்த வெற்றிதான் இது!'

'அப்படியா! மகிழ்ச்சி மன்னவரே! யார் பெற்ற வெற்றியானுலும், புகழ் தங்கள் மகுடத்திற்குத்தானே சொந்தம்.'

'உண்மைதான் ஜினேவியா! அந்த வீரனுக்கு நாளை அரசாங்க விருது வழங்கப் போகிறேன்! தாயகத்தைக் காத்த அவன் தோள்களுக்குத் தங்கமாலை! அந்த விழாவிலே விருது வழங்கப்போவது யார் தெரியுமா? நீதான்!'

'வீரனுக்கா? விருதா? நானு வழங்கவேண்டும்? எனக்கேன் மன்னவரே அந்த பெரும் பொறுப்பு! இப்படி வெளிக்குத் தன் உள்ளுணர்ச்சிகளைக் காட்டிக்கொள்ளாமல் நடந்துகொண்டாள் ராணி! ராணியின் கிளிப் பேச்சிலே, களிப்புக் கூத்தாடும் செண்டை விழிகளிலே; நிலாத்துண்டு நெற்றியின் ஒளியிலே; சந்தன மேனியின் பளபளப்பிலே உலகத்தைக் கண்டுகொண்டிருக்

★ தொடர்ச்சி 8-ம் பக்கம்

பேனா ஓவியம்

(9-ம் பக்கம்)

சென்ற இதழில்...

பெண் பார்க்க வந்த அழகப்பனும் அவன் தாயாரும் ஆத்திரத்தோடு ஊருக்குப் புறப்படுகிறார்கள். அழகப்பன் கோபத்தைக் கார் மீது காட்டி அதை ஆரம்பத்திலேயே வேகமாகப் புறப்படச் செய்கிறன். அப்போது காரின் முன்னே ஒரு பெண் "நிறுத்துங்கள்" என்று கூச்சலிட்டவாறு ஓடி வந்து விழுந்து விடுகிறாள்!

6

அவளை உடனடியாகத் தூக்கி மடி மீது சாய்த்துக்கொண்டான் அழகப்பன்! அவள் தலையிலே யிருந்து குபு குபு வென்று ரத்தம் பெருக்கெடுத்தபடி யிருந்தது, "யாரது? லேடி டாக்டர் மாதிரியல்லவா இருக்கிறது!" என்று வியப்போடு கூறினுன் நயினு முகம்மது! ஆனந்தியம்மா ஆனந்தியம்மா — என்று பதை பதைத்த குரல்களோடு ஊரார் அந்த இடத்தில் கூடி விட்டனர்.

ஆனந்தி கண் விழிக்கவில்லை. பிரக்ஞை இல்லாமல் இருந்தாள். தலையிலே யிருந்து வழியும் ரத்தம் நிற்கவில்லை. அழகப்பன் அருகிலிருந்தவர்களைப் பார்த்து, இந்த ஊரில் நல்ல ஆஸ்பத்திரி வேறு எங்கு இருக்கிறது என்று ஆவலோடு கேட்டான். 'இங்கு ஏது ஆஸ்பத்திரி? ஒரே ஒரு ஆஸ்பத்திரிதான்— அவுங்களுக்கேதான இப்படி வந்து விட்டதே!" என்று அங்கலாய்த்தனர் சுற்றியிருந்தோர்: "பக்கத்திலே ஐந்தாறு மைல் போனுல் பாலையூர் இருக்கிறது, ஒரு சின்ன "டௌன்" மாதிரி! அங்கு இருக்கு நல்ல ஆஸ்பத்திரி!" என்று ஒருவன் பாதை காட்டினுன். ஆனந்தியைக் காரிலே தூக்கி வைத்துக் கொண்டு அழகப்பன் முதலியோர் புறப்பட்டனர். தாயாரம்மாளின் மடியிலே ஆனந்தி சாய்ந்து கிடந்தாள். நயினு முகமது ஒரு துணியினுல் ஆனந்தியின் தலையை அழுத்திப் பிடித்து ரத்தப் பெருக்கைக் குறைக்கமுயன்ருன், துணியையும் மீறி வெளிவந்த ரத்தம் காரின் உட்பகுதியையே சிவப்பாக்கிக் கொண்டிருந்தது தாயாரம்மாள், மனம் படாதபாடு பட்டது. "என்னமோ அப்பா; இந்த மூதேவி வீட்டிலே சம்பந்தம் பேசியதிலேயிருந்து நமக்குச் சனியன் பிடித்தது!" என்று அங்கலாய்த்துக் கொண்டாள். பாலையூர் மருத்துவ மனையில் ஆனந்திக்கு அவசர அவசரமாக சிகிச்சை ஆரம்பமாயிற்று, ரத்தம் அதிகமாக வெளியேறி விட்டதென்றும் இன்னும் சிறிது தாமதித்திருந்தால் உயிருக்கே ஆபத்து வந்திருக்கலாம் என்றும் டாக்டர்கள் அபிப்பிராயம் தெரிவித்தார்கள். தாயாரம்மாளை மருத்துவ மனையில் விட்டு விட்டு அழகப்பனும் நயினுவும் விபத்து குறித்து போலீசாருக்குத் தெரிவிக்கப் புறப்பட்டனர்,

ஆனந்திக்கு சிகிச்சைகள் எல்லாம் முடிவுற்றன. தலையிலே நல்ல காயம், அதற்கு சிறு தையல் போட வேண்டிய அவசியம் ஏற்பட்டது. ஆனால் மயக்கமுற்ற நிலையிலே இருந்தாள். எப்பொழுதாவது ஒரு முறை புரண்டு படுக்க உடலை வளைப்பாள். அப்போது அவளது உதடுகள் "நிறுத்துங்கள்! நிறுத்துங்கள்!" என்று உச்சரிக்கும்.

டாக்டர்கள், அடிபட்ட கிலியில் உளருவதாக முடிவு கட்டினர். உளருகிறாள் என்பது உண்மை; ஆனால் அடிபட்ட பீதியில்தான் அப்படி உளருகிறாள் என்பது என்ன நிச்சயம்!

வெள்ளிக் கிழமை



"நிறுத்துங்கள்"

"நிறுத்துங்கள்!!"

அழகப்பனை அவனது அவசர முடிவுகளிலே யிருந்து விடுவிப்பதற்காகவும் அவள் அந்தக் கூச்சலை எழுப்பியிருக்கலாம்.

சிந்தாமணி ஒரு குழந்தைக்குத் தாயில்லை என்பதும்—அவள் கன்னிப் பருவத்தினள் என்பதும்— ஆனந்தி அறியாததல்லவே!—

அவளது நல்ல இருதயம் முதன் முதலாகப் பிறருக்குக் கேடு விளைவிக்க முயன்று அந்த முயற்சியிலேயே துவண்டிருக்கிறது—அதன் விளைவுதான் கார் விபத்து!

சிந்தாமணி குளக்கரையிலே தடுமாறி விழுந்து மருத்துவ மனைக்குக் கொண்டுவரப்பட்டதும், டைகர் மூளையிலே மூர்க்கத்தனமான திட்டங்கள் முளைத்தெழுந்தன. அந்தத் திட்டத்தை நிறைவேற்ற ஆனந்தியைத்தான் அவன் தேர்ந்தெடுத்தான், பெண் வீடு பார்க்க வருகிறவர்களை வழியிலேயே தீர்த்துக்கட்ட ஆட்கள் அனுப்பப்பட்டிருக்கிறார்கள். ஒரு வேளை அவர்களிடமிருந்து மாப்பிள்ளை வீட்டார் விடுபட்டு விட்டால் என்ன செய்வது என்ற சந்தேகத்தோடு டைகர் திரிந்து கொண்டிருந்தபோதுதான் சிந்தாமணி மருத்துவ மனைக்கு வர நேர்ந்தது. மாப்பிள்ளை வீட்டார் பெண்ணைப் பார்க்க எப்படியும் வைத்யசாலைக்கு வந்துதான் ஆக வேண்டும் எனக் கருதினன்.

அவன் அப்படி எண்ணியதிலே தவறில்லைதான், சிவநேசர் சாஸ்திரம், சம்பிரதாயம், சகுனம் முதலிய தடைகள் பலவற்றை விதித்துங்கூட அழகப்பன திருட்டுத்தனமாக சிந்தாமணியைப்பார்த்துவிடத்தானே விரும்பினுன்! இந்த மனோதத்துவத்தை உணர்ந்த டைகர், சிந்தாமணியை வெறுப்புக்குரியவளாக ஆக்க வெங்கொடுமைத் திட்டமொன்றை வெளியிட்டான் ஆனந்தியிடம்! அவளால் அதை நினைக்கக்கூட முடியவில்லை, "மன்னிக்க முடியாத பாதகம்!" என்று மறுத்துரைத்தாள். அழகப்பனுக்கும் தனக்கும் வெகுகாலமாக விரோதமென்றும், அவன் சிந்தாமணியை மணப்பதை எப்படியும் தடுத்தாக வேண்டுமென்றும் குதித்தான் டைகர்! 'அவள் வாழ்வு முள் நிறைந்த காடாகிவிடுமே!' என்று கண் கலங்கினுள் ஆனந்தி.

"அதைப்பற்றியகவலை உன்னை விட எனக்கு அதிகமாக உண்டு! சிந்தாமணி எனக்கு சொந்தக்காரி—அவளுக்கு ஏற்ற மணமகனைப் பார்த்து திருமணம் செய்துவைக்க வேண்டியது என் பொறுப்பு!" டைகர் மிக அக்கரையோடு பேசினுன். ஆனந்தியின் உடல் நடுங்கிற்று. பாலகங்காதரத் தேவரின பள்ளியறையிலேகூட அப்படி நடுங்கவில்லை அவள்!

"என்ன; சொன்னபடி செய்யப் போகிருயா; அல்லது என்னை மறந்துவிடப் போகிருயா?" என்று உறுமினுன் அவன். பதைப்பும் — பரபரப்பும் — அவளை ஆட்டி வைத்தன. ஒத்துக் கொண்டுதானே தீர வேண்டும் — ஆரம்பத்திலேயே தாட்சண்யத்திற்காக அவனிடம் தன்னை ஒப்புவித்தவளாயிற்றே அவள்! இன்னொரு பெண்ணுக்குப் பிறந்திருக்கிற குழந்தையை சிந்தாமணியிடம் படுக்க வைப்பது என்பதுதான் திட்டம். ஒரு பெண்ணிடம் ஒரு குழந்தை படுத்திருப்பது — கேட்பதற்கு பயங்கரமாக இல்லையென்றாலும்-பிரசவஆஸ்பத்திரியில் — அதற்கு அர்த்தமே வேறுயிற்றே! அதுவும் தாலிகட்டப்பட வேண்டிய தையல்! கன்னி கழியாத பருவப் பெண்! திருமணத்திற்கு நாள்பார்க்க வேண்டியது தான் பாக்கி-என்ற அளவிலேயுள்ள நிலைமை! சந்தர்ப்பத்தை சரியாகப் பயன்படுத்திக்கொண்டு சதி வேலையை வெற்றிகரமாக முடித்துவிட்டான் டைகர்!

அழகப்பன் மருத்துவ மனையிலிருந்து அக்கினிப் பிழம்பு போன்ற சொற்களை இறைத்துவிட்டுப் போனதும் ஆனந்தி நிலை தடுமாறி விட்டாள். சிந்தாமணி படுத்திருந்த பக்கமாக வேகமாக நடந்தாள். அவள் படுக்கையில் அமர்ந்தவாறு பக்கத்திலிருந்த குழந்தையை வியப்போடு பார்த்து கலவரப் பட்டுக் கொண்டிருந்தாள். அவளால் அசையவோ— எழுந்திடவோ இயலாது

"என்னம்மா இது, ஏது இந்தக் குழந்தை?" என்று ஆனந்தியிடம் கேட்டாள் சிந்தாமணி. ஆனந்தியின் கண்களில் நீர் பொல பொல வென உதிர்ந்தது. ஓடிப்போய் குழந்தையைத் தூக்கிக் கொண்டு "சிந்தாமணி! சிந்தாமணி!" என்றுள். அதற்குள் அவள் தொண்டை அடைத்துக் கொண்டது.

"என்னம்மா — எனக்கு ஒன்றுமே புரியவில்லை! பக்கத்திலே

அடுத்த இதழில்....

சிந்தனை சிற்பி சிற்றரசு,

மாநில மாநாட்டு சொற்பொழிவு வெளிவரும்.

குழந்தை! சேட்டால் அழுகை! யாரோ இரண்டு பேர் வந்தார்கள் அவர்கள் எங்க அப்பாவை ஏதோ பேசினார்கள்! என்ன விஷயம்?" என்று விசாரிக்கத் தொடங்கினாள்.

"ஒன்றுமில்லை சிந்தாமணி! உடம்பை அலட்டிக் கொள்ளாதே! மயக்கத்தில் உனக்கு அப்படி யிருக்கிறது!" என்று கூறிவிட்டு குழந்தையுடன் அதை விட்டு அசன்றாள் ஆனந்தி. ஆனால் அவள் கண்ணை விட்டு சிந்தாமணியின் களங்கமற்ற முகம் மறையவில்லை,"

இளமையின் துடிப்பு நிறைந்த அவள் அங்கமும், தங்கம் நிகர் இதயத்தை எடுத்துக் காட்டும் இனிய முகமும்—"வழுக்கி விழுந்தவள்" என்ற அடைமொழியால் அழுக்கேறி விடுமே என எண்ணியபோது ஆனந்தியால்வேதனை தாங்க முடியவில்லை. "பால கங்காதரத் தேவரின் பிடியிலே சிக்கி உறுதி குலைந்த பிறகு எவ்வளவு பாடுபட்டேன் நான்—அது டைகருக்குத் தெரிந்து விட்டது என அறிந்ததும் எப்படிப் பதைத்துப் போனேன் நான்—எனக்கே இப்படி யென்றால், ஒரு குற்றமும் புரியாதவளைப் பற்றி ஊர் கேலி பேசினால் என்ன ஆவாள் அவள்! அய்யோ கொடுமை—மிகக் கொடுமை! நான் லேடி டாக்டர் வேலைக்கே லாயக்கில்லை! பெண்களை அவமானப் படுகுழியிலிருந்து மீட்பதற்காக ஒரு சில லேடி டாக்டர்கள் பயன்படுவதாகக் கேள்விப் பட்டிருக்கிறேன். அது உண்மையோ பொய்யோ தெரியாது—ஆனால் என்னைப் பொறுத்த வரையிலே குற்றமற்ற ஒரு பெண்ணை குப்பை மேட்டு நாயினுங் கீழாக ஆக்கி விட்டேன்."

ஆனந்தி குமுறினாள், கதறினாள். தன் தவறுக்கு எப்படி கழுவாய் தேடிக் கொள்வது என்று பதறினாள். அந்தச் சமயம் வேம்பு வேறு வந்து சேர்ந்தான்; அந்த உளருவாயன். சிந்தாமணியை டைகர் திருமணம் செய்து கொள்ளவே இப்படியெல்லாம் திட்டம் போடுவதாக உளறி வைத்தான்.

ஆனந்திக்கு இந்தச் சேதி அடிவயிற்றில் நெருப்பைப் கொட்டியது. டைகருக்காகவே பெரும் பாதகம் செய்யத் துணிந்தாள்: அந்தப் பாதகம் டைகரின் புதிய நோக்கத்திற்குப் பாதையாக அமைகிறது என்பதை அவளால் பொறுத்துக் கொள்ள முடியவில்லை. தும்பைப்பூ போன்ற ஒருத்தியின் எதிர்காலத்தில் கரி பூசி விட்டு தனக்கும் துரோகம் நினைப்பவன் வெற்றி யடையக் கூடாது என்று உறுதி பூண்டாள், கலங்கிய அவளது உள்ளம் கண்டிப்பான முடிவெடுத்தது. டைகர் குறுக்கிட்டான. அவளைத் தடுக்க முடியவில்லை, உண்மையை நிலை நாட்டும் வைர நெஞ்சத்தோடு அவள் புறப்பட்டாள். "போ! போ! பெண்ணே! இந்த டைகரின் எண்ணத்தில் யாரும் மண்ணைப் போட முடியாது!" என்று கர்ஜனை புரிந்து கலகல வெனச் சிரித்தான். சிந்தாமணிபடுத்திருக்கும் பக்கம் திரும்பி உறுமினான். அதற்குள் ஆனந்தி தெருவிலே ஓட ஆரம்பித்தாள். சிவநேசர் வீட்டிலே மாப்பிள்ளை வீட்டாரை சந்தித்து உண்மையைக் கூறி மன்னிப்புப் பெறவே அவள் அப்படி ஓடினாள்.

ஆனால் அவள் ஆசை பூர்த்தியாகவில்லை. விபத்துக்கு ஆளானாள்.

"நிறுத்துங்கள்!"

"நிறுத்துங்கள்!!"

இந்த வார்த்தை மட்டுமே புலம்பலாக வெளிவருகிறது. டாக்டர்களோ அதை உளறல் என்று கூறிவிட்டார்கள்.

போலீஸ் ஸ்டேஷன் வேலைகளை முடித்துக்கொண்டு அழகப்பனும் நயினா முகம்மதும் திரும்பி வந்தார்கள். ஆனந்திக்கு சுயநினைவு வரவில்லை.

"நிறுத்துங்கள்!" என்ற வார்த்தையை மட்டும் அடிக்கடி சொல்லிக்கொண்டே வருவதை அழகப்பன் கவனித்தான்.

மருத்துவ மனையில் தான்கண்ட கொடிய காட்சிக்கும் — இவளது

மு. கருணாநிதி

புலம்பலுக்கும் ஏதாவது சம்பந்தம் இருக்குமோ என்று நயினா முகம்மதுவிடம் கேட்டான். நயினா முகம்மது ஆழ்ந்து சிந்தித்தானே தவிர உடன் பதில் கூறவில்லை.

"என்னடா பெரிய புத்தர் மாதிரி சிந்திக்கிறாய்? பதில் சொல்லேண்டா!" என்று அதட்டினான், அழகு!

"புத்தர் மட்டுந்தான் சிந்தித்தாரா? எங்கள் நபிகள் நாயகம் சிந்திக்கவில்லையா?...உங்கள்... இந்து மதத்தில்..."

"யாரும் சிந்திக்கவில்லை இதுவரையில — டே, நயினா! மத ஆராய்ச்சிக்கு இதுவா நேரம்? எவ்வளவு நெருக்கடியிலே சிக்கிக் கொண்டிருக்கிறோம்...அதை மறந்துவிட்டு..."

"என்னப்பா நெருக்கடி? எல்லாவற்றையும் மிகவும் சாதாரணமாக எடுத்துக்கொள் என்று எத்தனை தடவை சொல்லியிருக்கிறேன. நடப்பதெல்லாம் நல்லதுக்குத்தான!"

"எது நல்லதுக்கு? பெண் பார்க்கவந்த இடத்தில் இவ்வளவு கோளாறும நல்லதுக்கா?"

"ஆமாம்—பெண், தப்பானவள் என்று முதலிலேயே தெரிந்து விட்டது எவ்வளவு நல்லதாய்ப் போச்சு! பலகாரம் கசப்பா, இனிப்பா — என்று பார்வையிலேயே தெரிந்துவிட்டதேயப்பா! அதுவேற நாக்கைக் கெடுக்காமல் இருந்தது நம்ப நல்லகாலந் தானே!"

அழகு, நயினா முகம்மதின் பேச்சில் திருப்தி அடையாதவனாய் எழுந்து தாழ்வாரத்தில் உலவத் தொடங்கினான. அப்போது டைகர் அவசர அவசரமாக மருத்துவ மனையில் நுழைந்தான். அவனைப் பாாத்த அழகப்பன், "வாங்க! வாங்க!" என்று உபசரித்தான சற்று பயத்துடன்! "மன்னிக்க வேண்டும்!" என்று கேட்டுக்கொண்டான். "சே! சே!! அதெல்லாம் ஒன்றுமில்லை. நான் அப்படியெல்லாம் ஒன்றும் நினைக்கமாட்டேன். தவறுதல் சகஜம்!" என்று இளித்தபடி ஆறுதல் கூறினான் டைகர்! பிறகு ஆனந்தியைப் போய்ப் பார்த்தான. அவள் மயக்கத்திலிருந்து இன்னும் விடுபடவில்லை.

"நிறுத்துங்கள்!"

"நிறுத்துங்கள்!!"

இந்த சொல் மட்டும் விட்டு விட்டு ஒலித்தபடி இருந்தது மீண்டும் டைகர் அழகப்பனுடன் பேசிக்கொண்டே தாழ்வாரத்திற்கு வந்தான்.

"ஆனந்திக்கும் உங்களுக்கும் என்ன உறவு?" என்று கேட்டான் அழகப்பன.

"சகோதரி மாதிரி வைத்துக் கொள்ளுங்களேன்—தூரத்து உறவு! அவ்வளவுதான்!"

"எங்கே அவ்வளவு அவசரமாக ஓடி வந்தாள்!"

"எல்லாம் உங்களுக்காகத் தான்!"

"எனக்காகவா?"

"ஆமாம் உங்களுடைய சந்தேகத்தை மாற்ற; சிந்தாமணியை களங்கத்திலிருந்து விடுவிக்க!!"

"என்ன? என்ன? சிந்தாமணியைக் களங்கத்திலிருந்து விடுவிக்கவா?"

"ஆமாம், அவள் மிகவும் நல்லவள!"

"யாா?"

"ஆனந்தி!"

"சிந்தாமணி?"

"அவளும் தங்கமானவள் தான!"

இதைக் கேட்டு அழகப்பன் வியப்பில மூழ்கிவிட்டான.

தொடரும்

ஒளி விளக்கு!

• தி. மு. கழக இலட்சிய மாளிகைக்கு திருச்சி ஒரு எழில் தாழ்வாரம். அங்கே ஒளி விளக்கு தோழர் ராபி. சிரித்த முகமும் சிங்காரப் பேச்சும், பகை காணில் நெறித்த புருவமும் கொண்ட கடமை வீரர். கட்சியை உயிராக மதிப்பவர். கம்யூனிஸ்டு கட்சியின் அனுதாபியாக இருந்த தோழர் ராபி தி. மு. கழகததிலே தொண்டாற்றும் நல்வீரர்களிலே ஒருவராக விளங்குகிறா. பொதுக் குழு உறுப்பினருங்கூட! மாநில மாநாட்டுப் பந்தலை நட்சத்திரச் சோலையாக்கிய பெருமை தோழர் ராபியைத்தான் சேரும். வாழ்க இந்த ஒளி விளக்கு!

* * *

நன்றி.

சென்ற ஐந்து மாத காலமாக மலேயாலில் சுற்றுப் பயணம் செய்து, கடல்கடந்த நாட்டிலே நாயன விருந்தளித்த நாதசுரராஜா திருவெண்காடு டி. பி. சுப்பிரமணியம் அவர்கள் சென்ற **1—6—56** அன்று தாயகம் திரும்பினார்கள். மலேயாவில் தனக்கு நல்வரவு கூறிய ரசிக நண்பர்களுக்கெல்லாம் தனது நன்றியைத் தெரிவித்துக் கொள்ளுகிறார்.

நாத்திகமே பௌத்தம்— ஆச்சாரியாருக்கு அர்ப்பணம்!

○ ○

புத்தர் ஒரு நாத்திகர்; நாத்திகமே அவருடைய மதம்! அவருடைய கொள்கை இவ்வளவு புரட்சிகரமாக இருந்தபோதிலும் அவருடைய கவர்ச்சிகரமான தனிச் சிறப்புகள் மேலோங்கியிருந்ததால்தான் பொதுமக்கள் அவருக்கு அலாதி மதிப்பு வைத்திருந்தனர். ஏன்; ஐரோப்பிய நாடுகளில்கூட இன்றும் புத்தர் ஒரு நாத்திகர் என்று கேட்டு திகைப்படைகின்றனர். இந்தியாவில்கூட புத்தர் 'ஒன்பதாவது அவதார புருஷர்' என்று நம்ப வைப்பதற்கான முயற்சிகள் நடைபெற்றன; ஆனால் இந்த சூது பலிக்கவில்லை; புத்தருடைய போதனைகளில் இன்றுவரையில் 'கடவுள்" புகவில்லை.

இருபத்தைந்து ஆண்டுகட்கு முன்பு உலகத்திலுள்ள எல்லா மதங்களையும் ஒன்றுகூட்டி ஒரு சங்கம் நிறுவும் வகையில் சான்றோர் யாவரும் கூடினர். அப்போது எனது நண்பரான மறைத்திரு. ஆனந்த கௌசல்யாயனும் புத்த மதத்தின் சார்பாக அங்கே வந்திருந்தார். பின் சட்டதிட்டங்கள் வகுக்கப்படும்போது, எல்லோரும் கடவுளின் புத்திரர்களாகவே அங்கு வந்திருப்பதாகவும் — எனவே அந்த வகையில் எல்லோரும் சகோதரர்களென்றும் — அந்த முறையிலேயே சங்கத்தின் கொள்கைகள் வகுக்கப்பட வேண்டுமென்றும் சிலர் கூறினர். அப்போது புத்தமதச் சார்பாக வந்திருந்த பிரதிநிதி எழுந்துநின்று, புத்த மதத்தோருக்குக் கடவுள்மீது நம்பிக்கையில்லையென்றும், உடனடியாக மேற்படி வாசகத்திலுள்ள 'கடவுள்' என்ற வார்த்தையை நீக்கிவிட வேண்டுமென்றும் பேசினார். "கடவுள் என்னும் அந்த வார்த்தையை நீங்கள் நீக்காவிட்டால் நாங்கள் வெளியேறுவோம்!" — என்றும் பேசினார்.

"என்ன; கடவுள் நம்பிக்கையில்லாமல் எப்படி ஒரு மதம் இருக்கமுடியும்?" என்று நினைத்து அங்கு வந்திருந்த ஒரு இஸ்லாமியப் பிரதிநிதிகூட வியப்பிலாழ்ந்தார்.

ஆமாம்; பௌத்தத்திற்கு கடவுள் நம்பிக்கை கிடையாது என்பது உண்மைதான். ஆனால் அதற்கு மனிதன்மீது நம்பிக்கையுண்டு!

—பேராசிரியர்,
ராகுல சாங்கிருத்தியாயன்.

அவர் (புத்தர்) ஞான விளக்கம் பெற்ற ஒரு சனாதன ஹிந்துவைப்போலவே மற்ற ஆசிய மக்களுக்குப் போதித்தார். நாஸ்தீகராகப் பேசவில்லை.

★

...ஆனால் அவர் வேதாந்தத்துக்கு விரோதமானவர் என்றோ, அதை மறுப்பவர் என்றோ கூறுவதற்கில்லை. அவர் போதனை உண்மையான தன்னடக்கமும், உண்மையான ஞானமும் நிறைந்த உபநிஷத போதனையாகும். புத்தரை விஷ்ணுவின் அவதாரம் என்றே ஹிந்துக்கள் அமைத்துக் கொண்டார்கள். அது ஒரு தந்திரமல்ல; அவரது உண்மைநிலையை உணர்ந்து பக்தி உணர்ச்சியால்தான் அவ்வாறு ஒப்புக் கொண்டார்கள்.

—**ஆச்சாரியார்.**
(மே 6-ந் தேதிய டில்லி ரேடியோப் பிரசங்கம்!)

மரண வாசல்...

★ 5-ம் பக்கத் தொடர்ச்சி

தான் அரிஸ்டாடிஸ் மன்னன்! அந்த மயக்கு மொழிக்காரி, மனதை ஒருவனுக்கும், மலரனைய மேனியை மற்றொருவனுக்கும் காணிக்கையாக்கிடும் போக்கினள். கண்ட கண்ட இடம் தாவும் 'கவி'யின் குணம் படைத்தவள்! வேளைக்கு ஒன்று, விதவிதமான ரகத்தில் தேடியவண்ணம் 'பசி' நாக்குகளை சுழலவிடும் சித்திர முகத்தாள் என்பதை அறிந்துகொள்ள முடியாத 'அப்பாவி'யாகவே இருந்தான்! இப்படித்தான் பலரும் நினைத்தனர். ஏன், ஜினோவியாகூட, தன் 'சேட்டை'கள் மன்னன் அரிஸ்டாடிசுக்குத் தெரிந்திருக்க முடியாது— தெரிந்துகொள்ளுகின்ற முறையிலே இதுவரை நடந்துகொள்ளவில்லை என்ற நினைப்போடுதான் விழியில் பட்ட 'பருவ'ங்களை விருந்திற்கு அழைத்திடும் குணம் படைத்தவளாக இருந்தாள். இதெல்லாம் சபாஸ்டின் எகிப்து சேனைக்கு தளபதியாக நியமிக்கப்படுவதற்கு முன்! என்றைக்கு 'சபாஸ்டின்' தளபதியாக்கப்பட்டானோ, என்று சபாஸ்டினை முதல் முதலாக சந்தித்தாளோ அன்று முதல் ஜினோவியாவின் நடை முறையிலே மாறுதல்கள் ஏற்பட்டன. அவள் 'குரங்கு' மனம் மாறிற்று. அவள் ஆசையெல்லாம் ஒன்றாகத்திரண்டு உருண்டு, சபாஸ்டினாக உருவெடுத்தது. அன்று முதல் அந்த உருவைத்தான் மனமாளிகையில் வைத்து ரசித்துக் கொண்டிருந்தாள்.

அந்த வீரனின் ஒவ்வொரு உடலசைவிலும் இவள் உள்ளத்தைத் தொடுகின்ற இனம் தெரியாத ஒரு மயக்கம் இருப்பதாகக் கருதினாள்.

அந்தப் பட்டாளத்து வீரனின் நாமம்தான் இப்பொழுதெல்லாம் இந்தப் பட்டத்து ராணியின் இதயத் துடிப்பாக இருந்தது.

'வேளை வருமா! அந்த வீரனின் தோளைத் தழுவ! தொட்டணைத்து முத்தமிட! சுகமாளிகைக்கு மிதந்து செல்ல! என்றெல்லாம் ஏங்கினாள், அந் ஏந்திழை!'

அரண்மனை அழைப்புக்கு முன்பாக அந்தப்புரத்திலிருந்து அழைப்பு வந்ததைக் கண்ட தளபதி சபாஸ்டின் திடுக்கிட்டான். விருதுக்கு முன் விருந்து! அதுவும் ராணி ஜினோவியாவிடம் இருந்து அழைப்பு வருவதென்றால், அவன் நெஞ்சு 'பட பட' வென்றடித்துக் கொண்டது. என்ன செய்வதென்றறியாமல் திகைத்தான்.

அவன் திகைப்பிற்குக் காரணமே அரசியின் நெஞ்சம் ஒரு 'காமத் தொழிற்சாலை' என்பதுதான்! மறுப்பதென்னாலோ அவள் மகுடபதியின் இதயராணி. அவள் சீற்றம் சிரம் அறுக்கின்ற அளவிற்கு வளர்ந்தாலும் ஆச்சரியம் இல்லையல்லவா? இதன் காரணமாக தளபதி குழம்பிப்போய் இருந்தான்.

மறுநாள் ஜெனோவியா, விருந்துக்கு ஆடம்பரமான ஏற்பாடுகளைச் செய்திருந்தாள். அவள் எதிர்பார்த்த நேரத்திற்குள் தளபதி சபாஸ்டின் அங்கே வந்தான்.

மாதுளை இதழ் பிரித்து, மணிப் பற்கள் தெரியச் சிரித்து, சபாஸ்டினை வரவேற்றாள் ஜெனோவியா!

'வீரரே! உம் வாள் முனை எகிப்தின் கீர்த்தியை ஒரு படி உயர்த்திவிட்டது. உம் போன்ற வலிமை மிக்க இதயத்தினரைத்தான் தாயகம் நம்பிக் கொண்டிருக்கிறது. உம் திறமைக்கு என் மகிழ்ச்சியை தெரிவித்துக் கொள்ளுகின்ற விருந்துதான் இது, ஏற்றுக் கொள்ளவேண்டும்' இதைச் சொல்லி முடிப்பதற்குள் காண்போர் நெஞ்சத்தை சூறையாடும் அவள் சுந்தர விழிகள் இதைவிட அதிகமாக 'எதையோ' சொல்லிற்று! இரண்டு 'மொழி'களையுமே சபாஸ்டின் புரிந்து கொண்டான்,

அரசியின் ஒவ்வொரு அசைவிலும் ஏதோ ஒரு தவிப்பு, அவள் பேசும் ஒவ்வொரு வார்த்தையிலும் விளக்க முடியாத ஒரு தாகம், பளிச்சிட்டுக் கொண்டிருந்தது. தேவியின் 'வலை விரிக்கும்' படலத்திற்கு குறுக்கே நிற்க விரும்பாத சேடியர் புருக்கூட்டம் போல அரண்மனையின் ஒதுக்குப்புறத்திற்குச் சென்றனர்.

மதுக் கிண்ணங்கள் உருண்டன; மயக்கம் மேலிட்டது; மன்னன்மனைவி மாற்றானின் தயவிற்காக அந்த விருந்து மண்டபத்திலே படக்கூடாத பாடுபட்டாள்! கலகலவென்று சிரித்தாள்! கைவளை குலுங்க, கனக உடல் பளிச்சிட, மேலாடை நெகிழ்ந்துவிழ, மேகக் கண்களிலே மோகம் கொப்பளிக்க, தளபதி சபாஸ்டினை உபசரித்தாள். அந்த நிலையில் இனியும் அங்கிருந்தால் ஆபத்து என்று நினைத்து 'தங்கள் அன்பிற்கு என் நன்றி—வருகிறேன் அரசியாரே!' என்று கூறிவிட்டு வெளியேறினான். அவன் கொஞ்சமும் எதிர்பார்க்கவில்லை, ஜினோவியா சபாஸ்டினின் இரு கரங்களையும் பற்றியவண்ணம் போதை தோய்ந்த வார்த்தைகளைக் கொட்ட ஆரம்பித்தாள்!

'இது அழகல்ல அரசியாரே; எவ்வளவுதான் வரட்சி ஏற்பட்டாலும் கிளி பிணத்தைக் கொத்தக்கூடாது'

'ஆம் வீரனே! நன்றாகச் சொன்னாய்; ஜினோவியா என்ற இந்தக் 'கிளி' அரிஸ்டாடிஸ் என்ற அந்த கிழப் பிணத்தைக் கொத்தக்கூடாதுதான்; அதற்காகத்தான் என் அன்பே! உன்னை சரணடைகிறேன்; என் அழைப்பை காலிலே போட்டு நசுக்கிவிடாதே!'

'ராணி! 'மகாராணி தாங்கள்' என்ற ஒரே காரணம்தான் என்னைப் பொறுமையாக இருக்கச் செய்கிறது...இல்லையென்றால் ...!'

இதைக் கேட்ட ஜினோவியா சினம் கொண்ட பாம்புபோல சீறினாள்!

'மகாராணி...மடையனே! தேனை சுவைத்துப்பார் என்றால் தெவிட்டுமே என்று சொல்லும் முதல் முட்டாளே! சுகம் இதோ என்றால் முகம் சுளித்துக் கொள்ளும் திராணியில்லாதவனே; இந்த மகாராணியின் கண்ணோட்டத்தில்தான் உன் உயிரோட்டம் ஓட்டிக்கொண்டிருக்கிறது என்பதை மறந்துவிடாதே''...இப்படி வெறி பிடித்தவள்போல் கத்தினாள் ஜெனோவியா.

இப்படி பட்டத்து ராணி பட்டாளத்து வீரனோடு 'உரிமைப்போர்' நடத்திக் கொண்டிருக்கும்போதுதான் அரிஸ்டாடிஸ் வந்துவிட்டான்! நாட்டின் தலைவன்; தன் நாயகி சோர நாடகத்திற்கு ஒத்திகை நடத்திக்கொண்டிருக்கும் கோரமான காட்சியை கண்டான்! கொடுமைக்கு ஆளான ஏழைபோல் குமுறி நின்றான். புகழ் மாளிகையின உச்சாணிக் கொப்பிலே இருக்கவேண்டியவள்—புழு நெளியும் ஆபாசக் குட்டையாக இருப்பதென்றால்...புலி போல் சீறினான். "பொல்லாதவனே என் உப்பைத் தின்று, என் உடமைக்கே குறிவைத்து விட்டாயே... விருது தர நினைத்தேன், அதற்குப் பதிலாக என் அந்தப்புரத்தை விபசார விடுதியாக்க வந்துவிட்டாய்... உன்னைத் துண்டு துண்டாக்குகிறேன் ...உன் துடிக்கும் இளமையை சுக்குநூறாகக் கிழித்தெறிகிறேன்... அடப்பாவி, கன்னக்கோலோடு விருந்துக்கு வந்த காதகனே; நாளை விடிவதற்குள் உன்னை உயிரோடு புதைக்கிறேன்! காதற் புலவனே! உன்னைச் சுற்றிலும் கல்லறைக்கோபுரம் எழுப்பி உன்னை பூஜிக்கிறேன், அப்பொழுதுதான் என் பழி தீரும்!" என்று கூறி விட்டு கை தட்டினான்; சிப்பாய்கள் ஓடி வந்து சபாஸ்டினைக் கைது செய்தனர். குடி போதையில் இதையெல்லாம் விளையாட்டாக ரசித்துக் கொண்டிருந்த ஜெனோவியா 'போதை' தெளிந்த பிறகு செலியா மூலம் அனைத்தையும் அறிந்தாள். நீண்ட சிந்தனைக்குப் பிறகு ஒரு முடிவிற்கு வந்தாள்.

தளபதி சபாஸ்டினைக் கைது செய்து அனுப்பி விட்டு, ஜெனோவியா என்ன செய்கிறாள் என்பதை அவளுக்குத் தெரியாமலேயே கவனித்துக் கொண்டிருந்தான் மன்னன் அரிஸ்டாடிஸ். ஜெனோவியாவின் உள்ளத்தை அன்றுதான் முதலாவதாக அறிந்து கொண்டான், மன்னன். இவ்வளவு கொடுமைக்காரியா இத்தனை நாள் தன்னோடு குலவிக் கொண்டிருந்தாள்; இந்த கொலைகாரியா இது வரை தன்னோடு குயில் மொழி பேசிவந்தாள், என்பதை நினைக்கும்போது மன்னனின் கண்களிலிருந்து சாரை சாரையாக நீர் பெருக்கெடுத்தது. அதற்கு மேலும் அங்கு அவன் இருக்க விரும்பவில்லை. ஜெனோவியா தன் தோழி கிளியோவை அழைத்து காதோடு காதாய் 'குசுகுசு' வென்று சொல்லி விட்டு ஏதோ ஒரு பொருளை அவள் கையிலே கொடுத்தாள். அதைப் பார்த்த மன்னனின் வாய் 'அடிப் பாவி! பயங்கர மலைப்பாம்பே! என்று

❊ தொடர்ச்சி 10-ம் பக்கம்

★ 'சர்வோதயபுர'த்து ச்சரக்கு! ★

சோஷலிசம்

இரண்டு கறவைகள் உன்னிடம் இருந்தால்
அண்டைவீட்டானுக்கொன் றளித்தல் "சோஷலிசம்"

காப்டலிசம்

கறவைகள் இரண்டில் கடிதொன்றை விற்றுக்
காளை வாங்குவது "காப்டலிசம்"

கம்யூனிசம்

ஆவிரண்டினையும் ஆள்வோர்க்கு விற்றுத்
தேவைக்குப் பால்பெறச் செப்பல் "கம்யூனிசம்"

பாசிசம்

பகர் இருகறவையைப் பறித்த ஆள்வோரிடம்
தொகைதந்து பால்பெறச் சொல்வது "பாசிசம்"

நாசிசம்

உரியவன் தன்னை ஒழித்தே அவனின்
கறவையிரண்டையும் கைப்பற்றல் "நாசிசம்"

நியூடிலிசம்

இரண்டு கறவையால் திரண்டபால் அனைத்தையும்
சாக்கடைக்காக்குவது தான் "நியூடிலிசம்"

புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் அவர்கள் இன்று உலகத்திலே உலவி வரும் பல 'இசங்'களைப் பற்றித் தொகுத்துத் தந்திருக்கும் அரசியல் குறட்பாக்கள் பக்கத்திலிருப்பவை!

இரண்டு பசுக்கள் இருந்தால் தேவைக்கு அதிகமாயிருக்கும் ஒரு பசுவை தேவையுள்ளவனுக்குக் கொடுத்து விடுவது சோஷலிசம்!

உடைமை உனக்கு வேண்டாமப்பா; எல்லோருக்கும் பொதுவாக அதை அரசாங்கத்திடம் கொடுத்து விடு—பிறகு உன் தேவையை அரசாங்கத்திடமிருந்தே பெற்றுக் கொள்! —இது கம்யூனிசம்!

ஆனால் இந்த நாட்டிலே தான புரட்சிக்கவிஞர் கூற மறந்த ஒரு 'இசம்' உலகளக்கும் விளம்பரங்களோடு; ஆட்சியாளர்களின் அமோக ஆதரவோடு வளர்ந்து வருகிறது, அதன் பெயர் தான் 'சர்வோதயம்' அதை முழக்கும் டமார ஒலிகள்தான் இப்போது காஞ்சிபுரத்திலிருந்து கேட்கிறது!

இந்த 'இசம்' பசுக்களில் ஒன்றை வாங்கி அடுத்த வீட்டுக்காரனுக்கும் கொடுக்கவில்லை; அவை யிரண்டையும் அரசாங்கத்துக்கும் பொதுவாக்கவில்லை!

பாலின்றி வாடும் ஆயிரமாயிரம் ஏழைகளைக் கூவி அழைக்கிறார்கள். நிலப் பிரபுக்களிடமிருக்கும் பசுக்களுக்கு பருத்திக் கொட்டையையும், புண்ணாக்கையும் போட்டுக் கொழுக்க வைக்கிறார்கள். பிறகு குடம் குடமாய்ப் பால் கறந்து அதில் ஒரு குடத்தை மட்டும் வாங்கி, நாவரண்டு நாதியற்றோராய் வாழும் பரட்டைத் தலையரை அழைத்து, அவர்கள் எல்லோரையும் வாயைத் திறக்கச் சொல்லி விட்டு, ஒவ்வொருவர் நாக்கிலும் ஒவ்வொரு துளி பாலைத் தெளிக்கிறார்கள்!

—இது தான் பூதானமாம்; பாரதத்தின் இருள் அகற்றும் தூண்டா விளக்காம்!

இங்கே பசுக்களும் எல்லோருக்கும் பொதுவாகப் பங்கிடப் படுவதில்லை; பசு தந்த பாலும் எல்லோருடைய தேவையையும் பூர்த்தி செய்வதில்லை. ஆமாம்; உடைமை தனியாரையே சேர்கிறது; அதன் விளைவும் சமமாகப் பங்கிடப் படுவதற்கான விளக்கம் இல்லை!

இந்தப் புது 'இசத்'தின் பிரம்மாதான் ஆசார்ய விநோபாபாவே!

மயிலிடம் இறகு கேட்கும்
மதிவாணர்!
குரங்கினிடம் குழலூதும்
கூர்மதியாளர்!

கனல் வாரி வழங்கும் எரிமலையிலே சுருட்டு பற்ற வைக்கும் சீராளர்!

—இதில் எந்தப் பெயரை வேண்மோனாலும் வைத்து அழைக்கலாம் அந்தக் காந்தி சீடரை.

சட்டத்தின் இரும்புக் கரங்களை நீட்டினால் மட்டுமே அடங்கக்கூடிய நிலப் பிரபுக்களை, யாசகத்தினால் அடக்கி விடப் பார்க்கிறார்; அந்த விதத்தில் வெற்றி பெற்றிருப்பதாகவும் பீற்றிக்கொண்டு திரிகிறார்!

ஆயிரக்கணக்கான ஏகரா நிலத்துக்கு உரிமையானவர்கள் ஓரிரு ஏக்கராக்களை பூதானம் தந்து, அதன் மூலம் ஆட்சியாளர்களின் கைகுலுக்கத் தகுதி பெற்றவர்களாகிறார்கள்!

இப்படிக் கிடைத்த நிலத்தின் மூலம் எல்லா விவசாயிகளையும் வாட்டிவரும் நிலப் பசி அடங்கிவிடுமா? பாவம்! யானைப் பசியை அடக்க ஒரு கவளம் சோற்றுருண்டையைக் கொடுத்தானுமே யாரோ ஒருவன்! அவன் நிலையிலேதான் இருக்கிறார், ஆசார்யா விநோபா பாவே!

இவர்மீதும் தவறில்லை; இவர் என்ன செய்வார்? ஆட்டுவிக்கிறபடி ஆடுவதுதானே பொம்மலாட்டத்தின் சூட்சமம்! விநோபாவை ஆட்டுவிக்கிறார்கள் ஆட்சிபீடத்திலிருப்பவர்கள்; தாளம் போடுகிறார்கள் ஜெயப்பிரகாஷ் நாராயணர்கள். ஆடுகிறார், மயிலும் மங்கையும் வெட்கித் தலைகுனியும் வண்ணம் சுழன்றாடுகிறார் ஆசார்யா!

ஆட்சிபீடத்திலிருக்கும் காங்கிரஸ்காரர்களுக்கு இரு எண்ணங்கள் நிறைவேறியாக வேண்டும். ஒன்று: ஏழை விவசாயிகளுக்கு நிம்மதியளிக்கும் வகையில் புரட்சிகரமான திட்டம் தங்கள் கையில் இல்லாததால், 'உங்களைக் கைவிடமாட்டோம்; விரைவில் உங்கள் நிலப் பசியை அடக்குவோம்!' —என்று எந்த விதத்திலாவது அவர்களுக்கு ஆறுதல் தந்து, பொங்கு கடலாய் அவர்கள் மாறிவருவதைத் தடுத்தாக வேண்டும்!

அடுத்தது: யாருடைய கடைக்கண் பார்வையாலும், கஜானாவின் உதவியாலும் இவர்கள் ஆட்சிச் சக்கரத்தை உருட்டுகிறார்களோ அந்த நிலப் பிரபுக்கள், 'ஏதேது இந்த தேசிய வீரர்கள் சட்டத்தின் மூலம் நம் நிலத்தையெல்லாம் பிடுங்கிக்கொண்டு நிர்க்கதியாய் விட்டுவிடுவார்கள் போலிருக்கிறதே!'—என்று நினைப்பதற்கு இடமளிக்காமல், அவர்களையும் இதம் செய்தாக வேண்டும்!

–இவ்வாறு விவசாயிகளுக்கு நடிப்பு காட்டி, நிலச்சுவான்களுக்கு ஆதரவளிக்கும் கண் துடைப்புத் திட்டமொன்று ஆட்சி பீடமேறிகளுக்குத் தேவை!

—இதற்குத் தக்க துணை வருகிறார் விநோபா பாவே!

இந்த உண்மையை நாம் சொல்லவில்லை; காந்தீயப் பாதுகாவலர் டாக்டர் ஜே சி. குமரப்பாவே கூறியிருக்கிறார்:

"ஆச்சார்யா விநோபா பாவேயின் பூமிதான இயக்கம் ஒரு 'தேர்தல் ஸ்டண்ட்' ஆகும். அவர் சர்க்காருடையவும், அரசியல் வாதிகளுடையவும் கைப் பொம்மை ஆகி இருக்கிறார்.

"இன்னும் பத்து ஆண்டுகளுக்குள் நிலைமைகள் சீர் செய்யப்படவில்லையென்றால் ஒரு பெரும் இரத்தப் புரட்சி ஏற்பட்டே தீரும் என்றும் கூற விரும்புகிறேன்!"

—இரத்தப் புரட்சி வருமென்கிறார், குமரப்பா!

எப்படி வராமலிருக்கும்? காஞ்சீபுரத்திலே அவர்கள் அமைத்திருந்த சர்வோதய புரத்தைச் சென்று பாருங்கள். பார்க்க முடியாதவர்கள் சென்னையிலிருந்து வரும் 'சோஷலிஸ்ட்' வார ஏடு கூறுவதை யாவது படியுங்கள்:

"இந்த மகாநாட்டிற்குப் போனால்— போனவுடன் நம்மை போலீஸ்காரர்கள்தான் வரவேற்கிறார்கள். வரவேற்பு பலமாக இருக்கிறது. மகாநாட்டுப் பந்தலைச் சுற்றிலும் சுமார் 400 போலீஸ்காரர்கள் ஐம்பதுக்கு மேற்பட்ட சர்கிள் இன்ஸ்பெக்டர்கள். பத்துக்கு மேற்பட்ட உயர்தர போலீஸ் அதிகாரிகள்!

"இவர்களைத் தாண்டி உள்ளே செல்வோம். சுற்றிலும் ஏராளமான கார்கள். அத்தனையும் அமெரிக்காவிலிருந்து இறக்குமதியானதுதான். 1949-ம் ஆண்டிலிருந்து நேற்று வரையில் இறக்குமதியான அத்தனை மாடல் கார்களையும் அங்கே காணலாம். இவர்கள் எல்லாம் சர்வோதய மகாநாட்டிற்கு வந்திருந்தவர்கள்; சந்தேகப்பட வேண்டாம்.

"கார்களைக் கண்ணோட்டம் விட்டு விட்டு இன்னும் கொஞ்சம் நுழைந்தால் கதர் ஆடை அணிந்த திரளான மக்கள்.

"சில்க் ஜிப்பா அணிந்த திருமேனி. தும்பைப் பூ போன்ற 4 கஜத்திலே நைஸ் கதர், வேஷ்டியை இரட்டையாக உடுத்தியிருக்கும் இடை—தங்கச் சங்கிலி தொங்கும் பருத்த கழுத்து. மடிப்புக் கலையாமல் கழுத்தைச் சுற்றி அணிந்த அந்த அங்க வஸ்திரத்தையும் சில்க் ஜிப்பாவையும் மீறிக் கொண்டு கழுத்திலே யிருக்கும் தங்கச் செயின் காட்சியளித்துக் கொண்டிருக்கும் காட்சி. நவரத்தின கற்கள் பொறித்த

★ தொடர்ச்சி 10-ம் பக்கம்

மரண வாசல்...

★ 8-ம் பக்கத் தொடர்ச்சி

முணு முணுத்தது. அரிஸ்டாடிஸ் அங்கிருந்து நகர்ந்தான்.

மறுநாள் தளபதி சபாஸ்டினுக்கு மரண தண்டனை! இந்த செய்தி ஊரெங்கும் காற்று வேகமாக— இல்லை; இல்லை 'பெண்களிடம் சிக்கிய ரகசியம்'போல பரவிற்று!

'துரோகியை அப்படித்தான் கொல்லவேண்டும்'

'அதுகூடப் போதாது; அவன் அங்கங்களை அணு அணுவாகக் கழித்து தீயிலே வாட்ட வேண்டும்!'

'கல்நெஞ்சன்; கடவுளுக்கும் அஞ்சவில்லை!'

'உப்பிட்டவனுக்கே உலை வைக்க நினைத்தான் உன்மத்தன்!'

'தடுக்கவந்த அரசனைக்கூட கொல்ல நினைத்தானுமே கொடியன்!'

'இருக்கும், இருக்கும்! தளபதியல்லவா? வாளை நீட்டியிருப்பான்!'

'அதனால்தான் வாலை ஒட்ட அறுக்கப் போகிறார்கள்!'

'வெறிபிடித்த ஜன்மங்களுக்கு இதுவும் வேண்டும், இன்னமும் வேண்டும்!'

ஊர் வாய் இப்படியெல்லாம் அசைந்து கொடுத்தது.

★

எகிப்து நாட்டு பிணக் கோபுரங்கள் எழுப்பப்பட்டிருக்கும் மயான பூமி!

அங்குதான் நிறுத்தப்பட்டிருந்தான் தளபதி சபாஸ்டின்!

கொடுமையைக் கண்டு ரசிப்பதற்கும் ஒரு கூட்டம் இருந்து கொண்டுதான் இருக்குமோ? இல்லாவிட்டால் அந்த மயானத்தில் அவ்வளவு கூட்டம் கூடியிருக்குமா? காலம் ஒவ்வொரு வினாடியும் பயங்கரமாக மூச்சுவிட்டபடி நகர்ந்துகொண்டே இருந்தது.

தளபதி சபாஸ்டினைச் சுற்றிலும் கோபுரம் எழுப்பப்பட்டுவிட்டது.

இன்னும் ஒரே ஒரு கல் வைத்து சாந்து பூசி மூடிவிட்டால்—அவன் இருதய சப்தம் நின்றுவிடும்.

அந்த கடைசி கல்லைப் பதிப்பதற்குள் மன்னன் அங்கு வந்துவிடுவான். அவன் வந்த பிறகுதான் அந்த சடங்கு நடைபெற வேண்டும்.

குதிரைகளின் குளம்படி சப்தம் கேட்கவே கூட்டத்தினர் விழிகளெல்லாம் திரும்பின, மன்னன் அரிஸ்டாடிஸ் உயர்ந்தரகக் குதிரைகள் பூட்டப்பட்ட ரதத்தில் ஏறி வந்து கொண்டிருந்தான். அவன் பக்கத்திலே பௌர்ணமி நிலா போல பட்டத்து ராணி ஜினேவியா வீற்றிருந்தாள். ஆனால் அவள் வாய் கட்டப்பட்டிருந்தது. அவள் புழுப்போல நெளிந்து கொண்டிருந்தாள்,

ரதம் கல்லறைக் கோபுரத்தை நெருங்கி விட்டது.

கூட்டத்தினர் விலகி மன்னனுக்கு வழி விட்டு வாய் மூடி நின்றனர்.

ரதத்தை விட்டு கம்பீரமாக இறங்கி வந்தான் அரிஸ்டாடிஸ்.

ஜினேவியாவை அழைத்துவரச் செய்தான், அவள் கட்டுகள் அவிழ்த்து விடப்பட்டன.

'ஆ...என் அன்பே, சபாஸ்டின் என்னால்தானே நீ சாகப்போகிறாய்' என்று அலறியபடியே அந்தபிணக் கோபுரத்தை நோக்கி ஓடினாள்.

அந்தக் கோபுரத்தை இடித்து சபாஸ்டினை வெளியே அழைக்கச் சொன்னான் மன்னன். ஆட்கள் அப்படியே செய்தனர்.

ஆச்சரியத்தால் ஒன்றும் புரியாமல் அப்படியே அசைவற்று நின்றது கூட்டம்.

சபாஸ்டின் வெளியே வந்தான், எங்கிருந்தோ பேரிடியும் பெரு மழையும் பயங்கரக் கூச்சல் போட்டுக் கொண்டு வந்தது. திடீரென்ற இருள் கவிந்தது. எங்கும் ஒரே பேய்க்காற்று. அங்கு கூடி நின்றவர்கள் மூலைக்கு ஒருவராகத் தலை தெறிக்க ஓடினர். மன்னன் அரிஸ்டாடிஸ் பயங்கரமாக சிரித்துக் கொண்டே ஜினேவியாவின் கரங்களைப் பற்றினான், ஜினேவியா பயத்தால் வீறிட்டு அலறினாள். அவனைமார்போடு அணைத்தபடியே "என் அன்பே! ஏன் பயப்படுகிறாய் நான் உன்னை ஒன்றும் செய்யப் போவதில்லை. நான் செத்து விட்டேன். என் மனைவியே! என் இதய ராணி! எனக்காக நீ தயாரித்தாயே உன் தோழியின் கூட்டுறவோடு— அந்த 'உயிர் பறிக்கும் பாயாசத்தை'க் குடித்துவிட்டேன். ஆமாம் என் அன்பே! நீ வாழ்வதற்காக நான் சாகத் துணிந்து விட்டேன், என் மதிப்பிற்குரியவளே! உன்னைக் கொலைகாரியாக்கக் கூடாது என்பதற்காக நானே என்னைக் கொன்று கொண்டேன்; நான் போகிறேன்; ...நீ வாழு...எங்கே உன் காதலன்? ...சபாஸ்டின்...சபாஸ்டின்...வா நண்பனே! என் பரிசை ஏற்றுக் கொள்; உன் வீரத்திற்கு விருது ஏற்றதல்ல...அதைவிட விலை மதிக்க முடியாத என் செல்வம், இந்தா நண்பனே; இருதய சுத்தியோடு தருகிறேன்! இவள் உனக்குரியவள்—உன்னை விரும்புகிறாள்—ஆமாம்; நான் இனி குறுக்கிட மாட்டேன்...வா நண்ப; அருகில் வா!' இப்படி பயித்தியம் பிடித்தவனைப்போலக் கூறிக்கொண்டே, சபாஸ்டின் — ஜினேவியா இருவரின் கரங்களையும் இணைத்து வைத்தான், மன்னன் அரிஸ்டாடிஸ்!

இடியும், மழையும் இன்னும் அதிகமாயிற்று; மன்னன் அரிஸ்டாடிஸ் நெடுமரம்போல் சாய்ந்தான்; அவன் குடித்த விஷம் ரத்தமாகி, அவன் உயிரை எடுத்துக் கொண்டு வாய் வழியாக வெளியேறிற்று! அரிஸ்டாடிஸ் இருதயம் நின்றுவிட்டது. அவன் கொதிப்படைந்த இருதயக் குமுறல் விஸ்வரூபம் எடுத்தது போல், பயங்கர உறுமலோடு பேய்க்காற்றும் பெரு மழையும் உலகையே விழுங்குவது போல மிரட்டிக் கொண்டு வீசிற்று.

மறுநாள் காலை, அந்த மயானத்திலே மூன்று பிணங்கள் சேற்றிலே புதையுண்டு கிடந்தன! யாருக்காக மரணவாசல் எழுப்பப்பட்டதோ—அதே மரணவாசல் அந்தப் பெரு மழையில் சரிந்து விழுந்ததால் ஜினேவியாவும், சபாஸ்டினும் அந்தப் பிணக்கோபுரத்தின் அடியிலே சிக்கி கோரமாகச் செத்துக் கிடந்தார்கள்,

✱

பேனா ஓவியம்...

★ 9-ம் பக்கத் தொடர்ச்சி

தங்கக் கடிகாரச் சங்கிலி மணிக்கட்டிலே டால் வீசிக் கொண்டிருக்கும் அற்புதம்! டாம்கோ ஹேர் ஆயில் தடவி அழகாக வாரிவிடப்பட்ட கிராப்புத் தலை! வாயிலே கேப்ஸ்டன் சிகரெட். கையில் கேப்ஸ்டன் சிகரெட் டின். தங்க பிரேம் போட்ட கூலிங் கிளாஸ் அணிந்த கண்கள்!"

—அது மட்டுமா? ராஜேந்திர பிரசாத் தங்கியிருந்த அறையை குளிர்ச்சி செய்வதற்கு மட்டும் பத்தாயிரம் ரூபாய்களைச் செலவழித்திருக்கிறார்கள்!

பிரான்சு நாட்டிலே ஏழைகள் உணவுக்கு அழுதுகொண்டிருந்தபோது, உப்பரிக்கைகளிலே மதுவும், மாட்டிறைச்சியும் நீரென உபயோகிக்கப்பட்டதை வரலாற்றிலே படித்தோமே; அந்தக் காட்சியைத் தானே நினைவுக்குக் கொண்டு வருகிறது, சர்வோதயபுரத்திலே நடந்த கேளிக்கைகள்! குமரப்பா கூறியதுபோல. பின்னர் ஏன் இந்த நாட்டிலும் பிரான்சில் தோன்றியதுபோல் 'இரத்தப் புரட்சி' தோன்றாது?

★

'முரசொலி'

இலங்கை, உள் நாடு

ஆண்டு சந்தா	6—0—0
6—மாத சந்தா	3—8—0

வெளிநாடு

ஆண்டு சந்தா	7—0—0
ஆறுமாத சந்தா	4—0—0

ஊழல்-ஊழல்...

★ 2ம் பக்கத் தொடர்ச்சி.

ஒரு பங்கு இந்த வெளிநாட்டு இலாக்காவின் வண்டவாளங்களை பறைசாற்றிக் கொண்டிருக்கிறது!

நேருவை அசைக்க முடியாத மேருவென்று கூறும் மேதைகளே! ஒரு இலாக்காவை ஊழல் இல்லாமல் —பித்தலாட்டம் இல்லாமல் கண்காணிக்க முடியாதவர்தான் இந்த நாட்டுக்குப் பிரதமராக இருக்கிறார்! உங்களுக்கெல்லாம் வெட்கமாக இல்லை!

அது மட்டுமல்ல; மக்கள் தந்த வரிப்பணத்தைக் கரியாக்கி மக்கள் துரோகிகளாக அந்தப் பணியாளர்கள் மாறிய போதும் அவர்களின் பெயர்களை வெளியிடக்கூட நம் பிரதமர் அனுமதிக்கவில்லை! இருக்கலாமா இந்த நிலைமை?

ஒரு அணா நாணயத்தை ஒருவன் 'பிக் பாக்கெட்' அடித்துவிட்டால்கூட அவனுடைய பெயரைப் பத்திரிகைகள் எல்லாம் தம்பட்டம் அடித்து விடுகின்றன!

ஆனால் ஆயிரக் கணக்கான ரூபாய்கள் அரசாங்கத்தின் பெயரால் பாழ்படுத்தப்பட்டுங் கூட அந்தப் பாவிகள் யார் என்பதை உலகுக்குத் தெரிவிக்காமல் பாதுகாப்பளிக்கிறது இந்த அரசாங்கம்! இந்த பரிதாபத்திற்குரிய செயலுக்கு பண்டிதரும் உடந்தையாம்!

உண்மையிலேயே வெட்கப்பட வேண்டியவர்களாகிறோம், பருந்து போல உயரப் பறந்து கொண்டிருப்பதாகப் பாவனை செய்து கொண்டிருந்த பண்டிதர் இப்போது 'தொப்' பென்று சாக்கடையில் அல்லவா குதித்திருக்கிறார்! ★

வருந்துகிறோம்.

'எமை நத்துவாய் என எதிரிகள் கோடி இட்டழைத்தாலும் தொடேன்' என்ற கவிஞரின் வாசகத்திற்கிணங்க, கொள்கைக்காகவே உயிர் வாழ்ந்து, கொள்கை மூச்சுவிட்டபடியே நம்மையெல்லாம் விட்டுப் பிரிந்த லட்சியவாதி அழகிரியின் வாழ்க்கைத் துணைவியார், திரு. எத்திராசு அம்மையார் அவர்கள் கடந்த 25-5-56 அன்று இயற்கை எய்தினார் என்ற செய்தி கேட்டு பெரிதும் வருந்துகிறோம். பெற்றோரை இழந்து தவிக்கும் அந்த லட்சியக் குடும்பத்தினருக்கு நம் தாங்கொணா வருத்தத்தையும், அனுதாபத்தையும் தெரிவித்துக் கொள்ளுகிறோம்.

முகவரி மாற்றம் :

மு. புரட்சி மணி,
5, அந்தோனி தெரு,
ராயப்பேட்டை, சென்னை-14.

வேலூரில் மற்றுமொரு முறை!

முள்ளிப்பாளையம் தியேட்டரில் 10-6-56 ஞாயிறு மாலை
: 6-30 மணிக்கு :
இலட்சிய நடிகர் ராஜேந்திரன் குழுவினர் நடிக்கும்

மணிமகுடம்

மு. கருணாநிதியின் புதிய நாடகம்

கட்டணம் ; ரூ. 2—8—0, 1—8—0, 0—12—0, 0—6—0
பெண்கள் : அணா 4.

மாலை வந்து விட்டது!

அந்த விவசாயச் சிறுவனுக்கு ஒரே களைப்பு. நாள் முழுதும் வயலில் வேலை செய்தவனுயிற்றே, இருக்கத்தானே செய்யும்! அவன் சோர்ந்துபோய் மரத்தடியில் உட்கார்ந்தான். தன்னிடமிருந்த பையிலிருந்து எதையோ எடுத்தான்; சாப்பிட ஆரம்பித்தான்.

அப்போது அங்கே ஒரு காட்டு ஓநாய் வந்தது. "தம்பி! நீ என்ன சாப்பிடுகிறுய்?" என்று கேட்டது.

"தெரிய வில்லையா? ரொட்டி!" என்றுன் சிறுவன்.

"ரொட்டி ருசியாக இருக்குமா?" என்று கேட்டது ஆசைக்கார ஓநாய்!

"ஓ! மிக மிக ருசியாக இருக்குமே!" என்றுன் சிறுவன்.

"ஐயோ, அப்படியானுல் எனக்கும் கொஞ்சம் கொடேன்!" என்று கெஞ்சியது ஓநாய்.

சிறுவன் இரக்க மனம் படைத்தவன். பாவம், ஓநாயின் குணம் அவனுக்கு எப்படித் தெரியும்? மீதமிருந்த ரொட்டித் துண்டுகளைக் கொடுத்தான்.

ஓநாய் சாப்பிட்டது; மிகவும் சுவைத்துச் சாப்பிட்டது. அதன் முகத்திலிருந்தே தென்பட்டது; அது ரொட்டியை மிகவும் விரும்புகிறது என்பது!" "தம்பி! மிக மிக நன்ருக இருக்கிறதே! தினமும் இதையே சாப்பிடலாம் போலிருக்கிறதே! ஆமாம்; இதை எப்படிப் பெறுவது?" என்று கேட்டது.

"இதென்ன விசித்திரமான கேள்வி? நான் எபபடி சாப்பிடுகிறேனும். என் அம்மா தினமும் தயாரிக்கிருர்கள்! வேண்டுமானுல் நீயும் அதைப் போல் தயாரித்துக்கொள். நான் வழி சொல்லித் தருகிறேன்!" என்றுன் சிறுவன்.

"சொல்; சொல்! நானும் தயார் செய்தே சாப்பிடுகிறேன்!" — ஓநாய் அவசரப்படுத்தியது.

"முதலில் நிலத்தை நன்ருக உழ வேண்டும்..."—பையன் சொல்ல ஆரம்பித்தான்.

"பூ, இதுதானு பிரமாதம்? உழுதவுடன் ரொட்டி கிடைத்துவிடுமல்லவா?"–ஓநாய் குறுக்கிட்டுக் கேட்டது!

"அதற்குள்ளாகவா? உழுத பின் நிலத்தைப் பரம்படிக்க வேண்டும்! நன்ருக சிரமப்பட்டு எரு தூவி பரம் படிக்க வேண்டும்!..."

"இதென்ன பெரிய சிரமம்? பரம் படித்தவுடனேயே கிடைத்து விடுமல்லவா, ரொட்டி?'–வாலை ஆட்டிக் கொண்டு கேட்டது பொல்லாத ஓநாய்!

"கொஞ்சம் பொறு! பரம்படித்தவுடன் நல்ல கோதுமை விதைகளாகப் பொறுக்கி விதைக்க வேண்டும்!..."

"நல்ல விதை விதைத்தால், நல்ல ரொட்டி கிடைத்துவிடும்...ஆகா.."— என்று குதிக்க ஆரம்பித்துவிட்டது ஓநாய்!

"அடடே! அவசரக்கார ஓநாயே; விதை முளைக்க வேண்டாமா? முளைத்து செடியாக வேண்டாமா? வளர வேண்டாமா? கேள் இன்னும். பொல்லாத மிருகங்களிடமிருந்து அதைக் காப்பாற்ற வேண்டும்; கண்ணைப்போல் காக்க வேண்டும்; இரவு பகல் கண்விழித்து கவனித்துக் கொள்ள வேண்டும். பிறகு..."

"பிறகு...ரொட்டி! அப்படித்தானே!"

"அட அவசரமே! இனிமேல் தானே தொல்லைகளே அதிகம்! வளர்ந்த செடிகளில் கதிர்கள் தோன்றும். அக்கதிர்கள் முற்றும் வரையில் நீ காத்திருக்க வேண்டும். தெரிகிறதா?..."

"ஓ! தாராளமாகக் காத்திருப்பேனே! முற்றியவுடன் ரொட்டியல்லவா கிடைக்கும், ரொட்டி!..."

"ஊஹூம்...!" என்று சிறுவன் தலையை ஆட்டினுன். "அதற்குள்ளாகவா கிடைத்துவிடும்? கோதுமையை அறுவடை செய்ய வேண்டுமே! அதைக் கட்டுக் கட்டாகக் கட்டி நிலத்தில் பரப்ப வேண்டும். அப்புறம் இயற்கை வேறு துணை செய்ய வேண்டும். காற்றும் சூரியனும் நல்ல மனது பண்ணி அவைகளை உலரவைக்க வேண்டும். பிறகு அவைகளை களத்து மேட்டுக்கு தூக்கிச் செல்லவேண்டும்!..."

"சபாஷ்! சபாஷ்! ரொட்டி தின்பதற்கு களத்து மேடுதான் ஜோரான இடம்!..." என்று துள்ளிக் குதித்தது ஓநாய்!

"நல்ல கதைதான்! மற்ற வேலைகளை எல்லாம் யார் செய்வதாம்?"— என்று ஓநாயின் மகிழ்ச்சிக்கு அணை போட்டான் சிறுவன். "அப்புறம் வியர்வை சிந்த கோதுமைத் தாள்களைப் போரடிக்க வேண்டும்; கிடைத்த கோதுமையை மூட்டை கட்டி முதுகில் சுமந்து 'மில்'லுக்குத் தூக்கிச் சொல்ல வேண்டும்!..."

"அப்பாடி! எல்லாம் முடிந்துவிட்டதல்லவா?..."

"எப்படி முடியும்? மில்லில் கோதுமையை மாவாக அரைத்துக் கொடுப்பார்கள். அந்த மாவில் தண்ணீரைக் கலந்து பிசைய வேண்டும்!..."

"ஐயையோ! அப்புறம்?..."

"பிசைந்த மாவைத் துண்டு துண்டாக அறுக்க வேண்டும்!..."

"அப்புறமாவது ரொட்டி கிடைக்குமா? கிடைக்காதா?..."–ஓநாயின் உற்சாக மெல்லாம் எங்கேயோ மறைந்து விட்டது.

"அந்தத் துண்டுகளை அடுப்பில் வேகவைத்தால் ரொட்டி! நீ ஆசையுடன்சாப்பிட்டாயே, அந்த ருசியான ரொட்டி கிடைக்கும்! அப்புறம் நீ வயிறு புடைக்க சாப்பிடலாம்! ஆமாம்." என்று முடித்தான் சிறுவன்.

ஓநாய் சோர்ந்து போய் உட்கார்ந்துவிட்டது!

"ஏன்? என்ன யோசிக்கிருய்? ரொட்டி தயாரிக்க வில்லையா?" என்று கேட்டான் சிறுவன்.

"அதற்குத்தான் இவ்வளவு உழைக்க வேண்டியிருக்கிறதே! வேறு ஏதாவது குறுக்கு வழி இருக்கிறதா? தயவுசெய்து சொல்லேன்!" என்று கெஞ்சியது ஓநாய்.

"குறுக்கு வழியா? அதெல்லாம் ஒன்றும் கிடையாது! வேண்டுமானுல் அதோ பார், தூரத்தில் ஒரு காளைமாடு நிலத்தில் புல் மேய்ந்து கொண்டிருக்கிறதல்லவா; அதனிடம் போய் நிலத்தை உழுது தரச்சொல்...ம்...ம்...போ; போ!" என்றுன் சிறுவன்.

ஓநாய் தூரத்தில் பார்த்தது. காளைமாடு தெரிந்தது. அதனிடம் ஓடியது!

ஓநாயைக் கண்டதும் காளைமாடு மிரண்டது. ஆனுல் 'பயப்படாதே' என்று சொல்லுவதைப் போல் ஓநாயே அதிகாரத்துடன் பேச ஆரம்பித்து விட்டது. "ஏ, காளை மாடே! நான் யார் தெரிகிறதா? நன்ருகப் பார்த்துக் கொள்; பிறகு நான் சொல்வதைக் கேட்டுக்கொள்! நான் தினமும் ரொட்டி தின்பதற்கு ஆசைப்பட்டு விட்டேன்! ஆகவே இந்த நிலத்தை இப்போது உழுதாக வேண்டும். ஐயா ஆணை! தட்டாமல் உடனே உழு; நன்ருக உழு!" என்றது ஓநாய்.

அதன் திமிரைக் கண்டதும் காளை ஆத்திரப்பட்டது. ஆத்திரம் என்ன செய்யும்? அறிவுதானே வேண்டும்! என்னவோ யோசித்தது.

"ஐயா, அப்படியே! நான் தயார்; தாராளமாக உழுது தருகிறேன். ஆனுல் ஒன்று! நீங்கள் தயவுசெய்து என் முதுகின்மேல் உட்கார்ந்து கொண்டு அடித்துக்கொண்டே இருக்க வேண்டும்; அப்போதுதான் நான் ஒழுங்காக வேலை செய்வேன். ஏனென்றுல் நான் கொஞ்சம் திமிர் பிடித்தவன். அதனுல்தான்..." என்றது மாடு.

:: ரஷ்யக் கதை ::

"ஓ, அதற்கென்ன?, எங்கே கொஞ்சம் குனிந்துகொள்; நான் முதுகில் ஏறிக் கொள்ளுகிறேன்!" என்று சொல்லிக்கொண்டு 'ராஜ' நடை போட்டு வந்தது ஓநாய்.

காளைமாடு குனிந்துகொண்டது. ஓநாய் ஏற முயற்சித்தது. ஆனுல், அதே சமயம் சற்றும் எதிர்பாராத வண்ணம், காளை தனது கூறிய கொம்புகளால் ஓநாயை வீசி எறிந்தது. ஓநாய்க்கு பூமியே அதிருவதைப்போல இருந்தது. வலி தாங்க முடியாமல் ஊளையிட்டுக்கொண்டே தூரத்தில் ஒரு புதருக்கிடையில் 'தொப்'பென்று விழுந்தது. காளை மாடு சிரித்துக்கொண்டே ஓடி மறைந்தது!

ஓநாய்க்கு பொல்லாத ஆத்திரம்—எல்லையில்லாக் கோபம்! பசி வேறு வயிற்றைக் கிள்ள ஆரம்பித்து விட்டது.

"ரொட்டியாம் ரொட்டி! அதைச் செய்ய இவ்வளவு சிரமங்களா?" என்று முணுமுணுத்துக் கொண்டே இருந்தது. மாலை மறைந்துகொண்டு வந்தது.

இருள் நன்ருகப் படர்ந்து விட்டது. புதரை விட்டு வெளியே தலைநீட்ட ஆரம்பித்தது ஓநாய்.

அப்போது ஏதோ 'சலசல' என்ற சப்தம்...யாரோ நடந்து வருவதைப்போல் கேட்டது. ஓநாய் கவனித்தது. ஓர் உருவம் நடந்து வருவது தெரிந்தது. அவ்வளவுதான்; மறு கணம் தனது அகன்ற வாயைத் திறந்து — கோரப் பற்களை நீட்டி—'குபீர்' என்று அதன்மேல் பாய்ந்தது, பசிக்கார துஷ்ட ஓநாய்!

"ஐயோ" என்ற அலறல் — அதைத் தொடர்ந்து ஓநாயின் கோர கவ்வல் — பயங்கரக் கடி — பாழும் செயல்!

உருவம் பிணமாகச் சாய்ந்தது. ஓநாய் இரத்தம் கசியும் அந்த உடலை சுவைத்து உண்ண ஆரம்பித்து விட்டது!

"ரொட்டி செய்ய எத்தனை வேலைகள் சொன்னுன் அவன். ஆனுல், உழைப்பே இல்லாமல் உணவு கிடைத்து விட்டதே!...பாடுபடாமல் பலன் கிடைத்து விட்டதே!...இந்த மகத்தான 'மர்மம்' தெரியாத மகா புத்திசாலி எனக்கு சொல்ல வந்து விட்டான் யோசனையும்; உழைக்க வழியும்! முட்டாள், முட்டாள்!... ஹா—ஹா—ஹா!" என்று சிரித்துக் கொண்டே அந்த உருவத்தின் தலையை சுவைக்கப் போனது ஓநாய். அப்போது மேகக் கூட்டத்திலிருந்து விடுபட்ட சந்திரனின் ஒளியிலே அந்த உருவம் நன்ருகப் புலப்பட்டது. யார் அது? வஞ்சக ஓநாயின் பிடியிலே சிக்கி அதற்கு உணவாகும் அந்த உருவம் யாருடையது? ஓநாய்க்கு உழைப்பதற்கு வழி சொல்லித் தந்தானே, அந்த உத்தம விவசாயச் சிறுவன் தான் அவன்!

—சொர்ணம்

கடைசிப் பக்கம்
எழுத்தாணி

அ. வீரப்பன்; உடையார்பாளையம்.

(?) சேற்றில் செந்தாமரை மலர்வது ஏன்?

காங்கிரசில்கூட சில நல்லவர்கள் இருப்பதில்லையா; அந்தப் போலத்தான்!

(?) கண்ணீர்த்துளிக் கட்சி மாண்டு விட்டது என்று 'விடுதலையில்' வந்திருக்கும் அறிக்கைபற்றி உமது கருத்தென்ன?

பரவாயில்லை; மாண்டதை உறுதிப் படுத்திக் கொண்டு இனிமேலாவது நம்மை 'கண்ணீர்த்துளி'களென்று வசை பாடாமலிருந்தால் சரிதான்!

கே. மந்திராசலம்; மேட்டுப்பாளையம்.

(?) அறிஞர்கள் செல்ல அஞ்சும் இடம் எது?

காமராசர்கள் கனிவுடன் சென்று, பணிவுடன் கெஞ்சி மகிழும் இடம்—டெல்லி பீடம்!

எஸ். கோதண்டராம்; தஞ்சை.

(?) ஓ, எழுத்தாணியாரே; உமது கழகத்துக்கு கவர்னர் பிடிக்காதிருக்கும்போது அவர் கலந்து கொண்ட கூட்டங்களில் உமது அண்ணாதுரையும் பேசலாமா?

நன்றாக இருக்கிறதய்யா உமது கேள்வி! சைவனுக்கு மீன் பிடிக்காது என்பதற்காக அந்த மீன் வாழும் தண்ணீரையும் குடிக்காமலிருக்க முடியுமா? நாங்கள் எதிர்ப்பது கவர்னர் பதவியைத்தானே தவிர தனிப்பட்ட பிரகாசாவின் மீது எங்களுக்கு விரோதமில்லை!

துரை. முருகேசன்; காரமடை.

(?) நம் மந்திரிகளுடைய ஓய்வு நேர வேலை என்ன?

ராமநாதபுரம் ராஜாவுக்கு குதிரை ஆடுவது; சுப்ரமணியனுருக்கு குரு உபதேசம் கேட்பது; காமராசருக்கு தி. மு. கழகத்தைத் திட்டுவது—இவைதான்!

கே. கருப்பசாமி; மதுரை.

(?) ஆச்சாரியார் தன்னுடைய உடம்பில் சிறிதாவது திராவிட இரத்தம் ஓடுகிறது என்றாரே; அப்படியானல் காமராசர் உடம்பிலும் சிறிதளவாவது ஆரிய இரத்தம் ஓடுகிறதா?

இருக்கலாம் நண்பரே! ஆச்சாரியார் உடலில் அணுவளவாவது திராவிட இரத்தம் ஓடுவதால்தான் துணிவுடன் தி. மு. க.வை எதிர்த்து சவால் விட முடிந்தது!

காமராசர் உடலிலும் ஆரிய இரத்தம் ஓடுவதால்தான் அவர் தீண்டாமைச் சுவரொட்டிகளை 'வாபஸ்' பெறுகிற அளவுக்கு கோழைத்தனத்துக்கு பலியாக முடிந்தது!

கருப்பத்தேவர்; மதுரை.

(?) முத்துராமலிங்க தேவர் திருஞான சம்மந்தருக்கு வக்காலத்து வாங்குகிறாரே ஏன்?

அட சும்மா யிருங்களய்யா; திருஞான சம்பந்தரும் "நேதாஜி" போல உயிரோடிருப்பதாக அறிக்கை விட்டாலும் விடுவார் அவர்!

சுந்தரேசன்; காரைக்குடி.

(?) ஐந்தாண்டுத் திட்டங்கள் நிறைவேற என்ன செய்யவேண்டும்?

பேச்சு குறையவேண்டும்; அதற்கு பண்டிதர் ஊமையாகப் பிறந்திருக்க வேண்டும்!

ரங்கநாதன்; ஆண்டிப்பட்டி.

(?) அமெரிக்காவிற்கும் நம் நாட்டிற்கும் உள்ள வேறுபாடு என்ன?

அவர்கள் அணுகுண்டுகளைக் கண்டுபிடிக்கும் போது, நாம் அம்பர் சர்க்காக்களை அல்லவா கண்டுபிடிக்கிறோம்!

அறிஞர்
அண்ணாவின்
இராமநாதபுரம் மாவட்ட நிகழ்ச்சிகள்.

ஜூன் 14 – இராமநாதபுரம்
,, – பரமக்குடி
15 – திருவில்லிப்புத்தூர்
,, – தளவாய்புரம்
16 – சாத்தூர்
,, – விருதுநகர்
17 – கமுதி
,, – அருப்புக்கோட்டை

சென்னை
மீர்சாகிப்பேட்டையில்
10-6-56 அன்று
மு. கருணாநிதி
பேசுவார்.

கலையுலகில் கொள்கை முழக்கம்!
ஆங்கில "சுதந்திரா" கருத்து!

★

இந்தப் புதிய கட்சி (தி. மு. க.) சென்னை ராஜ்யத்துக்குள் தன் பணியைத் துவங்கி, பின் பற்றுவோர் எண்ணிறந்தோரையும், திறமையான அமைப்பையும் பெற்றிருக்கிறது.

ஏற்கெனவே தனக்கென ஒரு மேடையையும், பத்திரிகை அமைப்பையும் தயாரித்துக் கொண்டதுடன், அரசியல் பிரச்சாரத்திற்குப் பலமான கருவிகளான ஒரு புது தமிழ் நாடக மேடையையும், சினிமாவையும் நிர்மாணித்துக் கொண்டிருக்கிறது!

★

ஆங்கில ஏடு 'சுதந்திரா' ஜூன் 2-ம் நாள் தலையங்கம் இப்படிக் கூறுகிறது; ஆனால் நம்மவர்களோ.........?

★ அஜந்தா ஓவியம்
போல் அழகான
அச்சு வேலைக்கு..

சித்ரா பிரிண்டர்ஸ்,
25-27, பண்டி வெங்கடேச நாயக்கன் தெரு,
(கெல்லட் பள்ளிக்கு எதிரில்)
திருவல்லிக்கேணி, சென்னை-5.

* திருமண அழைப்பிதழ், வாழ்த்திதழ், நோட்டீசுகள், புத்தகங்கள் மற்றும் எல்லாவித அச்சு வேலைகளையும் நாங்கள் ஏற்றுக் கொள்ளுகிறோம்.

சதாசிவம்; கழுகுமலை.

(?) வினோபா பாவே திடீரென்று பத்திரிகை விளம்பரங்களுக்குப் பாத்திரமாகி யிருக்கிறாரே; எப்படி?

அவர் ஒரு 'ஹெலிகாப்டர்' விமானம்; கொஞ்ச தூரம் தரையில் செல்ல வேண்டிய அவசியமில்லாமலேயே உயரத்துக்குச் சென்று விடுகிறார்—அரசாங்கத்தின் மறைமுக சக்தி உந்தித் தள்ளுகிற காரணத்தால்!

வீரபத்ரன்; திருவனந்தை.

(?) சர்வோதயபுரத்தில் என்ன உதயமாயிற்று?

பிற்போக்கு வாதம் என்கிற வால் நட்சத்திரம்தான்!

கே. ஆர். எம். சாமி; மூணார்.

(?) அதிகாரம் என்பது மதுவா? மங்கையா?

அரைகுடம் போன்ற குரங்குகளுக்கு அது ஒரு மது; உல்லாச வெறியர்களுக்கு அது ஒரு மங்கை!

எல். இராமச்சந்திரன்: வேதாரண்யம்.

(?) வினோபா பாவேயை ஏன் 'ஆசார்யா' என்று அழைக்கின்றனர்? உள்ளத்தூய்மை கொண்டிருப்பதாலா?

இல்லை; தன்னைத் தூய்மைப் படுத்திக் கொள்வதற்காகத்தான் அவர் உண்ணா விரதம் மேற்கொண்டார். அப்படியானல் அதற்கு முன்பு அவர் அசுத்தமானவராகத்தானே இருந்திருக்க வேண்டும்?

குடந்தையில்
11—6—56 அன்று
மு. கருணாநிதி
பேசுவார்.

ஆசிரியரும், அச்சிடுபவரும், வெளியிடுபவரும் மு. கருணாநிதி, 'முரசொலி' அச்சகம், 4/128, மவுண்ட் ரோடு, சென்னை-6